1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 31-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஆவணிமாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை— பிரதிசதம் 10

## தேவமாதாவின் மோட்சாரோபணம்

நாம் சொல்லிவருகின்ற தேவமாதாவின் பிரார்த்தனையை மாதாவின் புகழ்மாலையென்று அழைக்கலாம். இந்தப்புகழ் மாலையிலே காலந்தோறும் ஒன்றொன்றாய் நாற்பத்தொன்பது மலர்கள் புனையப்பட்டிருக்கின்றன. இவற்றிலே கடைசியாகச் சமீபகாலத்திலே புனையப்பெற்றது, "மோட்சத்திற்கு ஆரோபணமான இராக்கினியே" எனும் சுகந்தமலராகும். தேவமாதாவின் மோட்சஆரோபணமானது தவறுவரம்பெற்ற சத்தியதிருச்சபை நமக்குப்போதிக்கும் விசுவாசசத்தியங்களில் ஒன்று. அதனால் இதையும் கத்தோலிக்கரில் எவராவது மறுதலிக்கத்துணிந்தால் அவர்திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளப்படவேண்டியவரே.

நமது ஆதித்தாய் தகப்பன் கட்டிக்கொண்டபாவத்தினாலே வந்தெய்திய பலாபலன்களுள் ஒன்று மரணமும், அதனையடுத்துவரும் சரீர அழிவுமாகும். மண்ணால் உண்டாக்கப்பட்ட நமது சரீரம் மரணத்தின்பின் மண்ணுக்கே செல்லுகின்றது. மாசெயறியாத நமது இரட்சகரும் நமக்காக மரிக்கத்திருவுளமானார். ஆயினும் மரணித்தபின் அவர்சாவின்மேல் வெற்றிகொண்டார். அவரது திருச்சரீரம் மண்ணுக்கு இரையாகவில்லை. மரித்தமூன்றாம் நாள் அவர் கல்லறையைவிட்டு உயிர்த்தெழுந்தருளினார். பின்னர்நாற்பதாம்நாள் ஆத்துமசரீரத்துடன் பரலோகத்துக்கு ஆரோகணமானார். அவரைப்போலவே அவர் திருத்தாயாரும் மரித்தாள். கல்லறையிலே அடக்கஞ் செய்யப்பெற்ற—பாவமாசற்ற—கன்னிமைகுன்றாத— தேவகுமாரனை ஈன்றெடுத்த அவளது திருச்சரீரமும் ஏனைய மானிடரின் சரீரத்தைப்போல் மண்ணுக்கு இரையாகவில்லை. சருவேசுரனின் விசேஷஅனுக்கிரகத்தால் அது திரும்பவும் சோதிபொருந்திய தனது ஆத்துமத்துடன் இணைக்கப்பெற்றுமோட்சத்துக்கு எடுத்துச்செல்லப் படலாயிற்று. இதைத்தான் "தேவமாதாவின்மோட்சாரோபணம்" என்று அழைக்கிறோம்.

நமது திவ்வியஇரட்சகரின் மோட்சாரோகணத்திற்கும், தேவதாயாரின் மோட்சாரோபணத்துக்கும் பாரதூரமான வித்தியாசம்உண்டு. அவர் தேவனாகையாலே தமது சுயவல்லமையால் உயிர்த்தெழுந்தருளினார். தமது சுயவல்லமையால் மோட்சத்துக் கெழுந்தருளினார். தேவ அன்னையோ தமதுசொந்த வல்லமையால் அல்ல, ஆனால், சருவேசுரனின் வல்லமையால் உயிர்ப்பிக்கப்பெற்று, ஆத்துமசரீரத்துடன் மோட்சத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டாள். ஆத்துமசரீரத்துடன் அவள் மோட்சத்துக்கு எடுத்துச்செல்லப் பெற்ற இந்தச்சத்தியம் திருச்சபையின் ஆரம்பகாலமுதலே விசுவசிக்கப்பட்டுவந்தது. தேவதாயாரே நமக்குப்படிப்பித்த செபமாலையின் நான்காவது மகிமைத் தேவஇரகசியத்தில் இந்தச்சத்தியத்தையே நாம் தியானித்துவருகிறோம். அவளுக்குக்கிடைத்த இந்தமேலான மகிமைக்கு அடிப்படையான காரணங்கள், அவளது அமலோற்பவமும், கன்னிமைகுன்றாத தேவதாய்என்ற மகிமையுமேயெனில் மிகையாகாது.

தேவமாதா ஆத்துமசரீரத்துடன் மோட்சாரோபணமானாள் எனும்சத்தியத்தைப் பரிசுத்தபிதா பன்னிரண்டாம்பத்திநாதபாப்பரசர் பரிசுத்தவருடமாகிய 1950-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 1-ந்திகதியன்று தமக்குள்ள தவறாதவரத்தைக்கொண்டு ஓர் விசுவாசசத்தியமாகப் பிரகடனஞ் செய்யலாயினர். "எப்பொழுதும்கன்னிகையான தேவதாய் இவ்வுலகவாழ்வின்முடிவில் ஆத்துமசரீரத்துடன் மோட்சத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டாள் எனும்சத்தியம் சருவேசுரனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியம்"என அப்போது அவர் பிரசித்தமாக அறிவித்துநின்றார். தேவமாதாவின் மோட்சாரோபண திருநாளை நாம் வருடந்தோறும் ஆவணிமாதம் 15-ந்திகதி கொண்டாடிவருகின்றோம். அப்போதுநாம் செய்யவேண்டியது என்ன? பரிசுத்தவான்களுக்கு உலகமுடிவில்கிடைக்கவிருக்கும் மகிமைபொருந்திய மாமிசஉத்தானம் நமது அன்னைக்கு அவளது உலகவாழ்வின்முடிவிலே கிடைத்ததற்காக அவளை வாழ்த்தித்துதிப்போம். அவளுக்குக் கிடைத்த இந்த மாபெரும்பாக்கியம் நடுத்தீர்வைநாளிலே நமக்கும்கிடைக்கத் தயைபாலிக்குமாறு அவளை இரந்துமன்றாடுவோம்.

## கம்யூனிஸமும் கிறீஸ்தவமும்

(முன் தொடர்ச்சி)

கம்யூனிஸம்விரும்பும் சமாதானம் அதன்புத்திக்கு ஏற்றசமாதானம். இந்தச்சமாதானம் யுத்தத்தைவிட மிகவும் பயங்கரமான—மரணத்தைவிடப் பயங்கரமான சமாதானம். அடிமைகள் ஆக்கப்பட்டு ஒன்றுஞ்செய்ய முடியாத — ஒன்றும் பேசமுடியாத நிலையிலிருப்பவர்களின் சமாதானம். அடிபட்டுத் தரையில்விழுந்து கிடப்பவரின்சமாதானம்.

கம்யூனிஸ்தர்கள் சமாதானத்தை அடைவதில்லை. ஏனெனில், அவர்களுக்குத் தேவையாயிருப்பது யுத்தம். அதேபோல, அதிகாரத்தைக்கைப்பற்ற மக்களிடையே துன்பநிலை இருப்பதும் அவசியம். கம்யூனிஸ்தர்களின் பாஷையில்சமாதானம்என்றால், தாங்கள் ஆயுதபாணிகளாகவே இருந்துகொண்டு மற்றவர்களை நிராயுதபாணிகளாக்கி விடுவது. மற்றவர்கள் தங்களிடம் சரணடைவது.

"இன்னொரு புதியயுத்தம் ஏற்பட்டு, சோவியற் சைனியங்கள் பிரான்ஸ்தேசத்திற்குள் நுழைவதாயிருந்தால் தொழிலாளர்களும், பிரான்சின்மக்களும் அங்குபடையெடுத்துவரும் சைனியங்களுடன் பரிபூரணமாக ஒத்துழைப்பர்" என்று தோரேஸ்என்னும் பிரான்சிய கம்யூனிஸ்ததலைவர் கூறியுள்ளார்.

சமாதானம் துவேஷத்தொடு சேர்ந்து குடியிருக்கமுடியாது. முதலில் துவேஷத்தை அகற்ற வேண்டும். யுத்தத்தைப் போலவே, சமாதானமும் மனச்சாட்சியை மூலகாரணமாகக் கொண்டது. சமாதானம் வெளியிலிருந்து உற்பத்தியாகி நம்மிடையேவரும் காரியமல்ல. திடீரெனக்கிளம்பும் புயலல்ல. அது எல்லாத்தையும்விட இருதயத்திலிருந்து உற்பத்தியாகும் விஷயம்.

கிறீஸ்தவ சமூகஅமைப்புத் திட்டம்ஒன்றே சமாதானத்தை அளிக்கக்கூடும். ஏனெனில், அது மனிதர்களிடையே உண்மையான சகோதரஉணர்ச்சியை ஏற்படுத்துகிறது. ஒருகிறீஸ்தவன் கடவுளைப்பார்த்து "எங்கள்பிதாவே" என்று இருதயபூர்வமாகஅழைக்கும் ஒவ்வொரு தடவையும் சமாதானத்தை ஏற்படுத்துகிறான். ஏனெனில், கிறீஸ்தவனுக்கு அடிமையென்றும், பிரபுவென்றும்இல்லை. மிலேச்சனென்றும், ரோமையனென்றும் இல்லை. தனவந்தனென்றும், ஏழையென்றும்இல்லை. தன் சகோதரர்களாயிருக்கும் தேவனுடைய மக்களாகவே அவன் எல்லா மனிதர்களையும் பார்க்கிறான்.

"சமாதானஇயக்கம்" என்பதற்காகப்பிரசாரம்பண்ணுபவர்களிற்சிலர் எதார்த்தமாகச் சமாதானத்தை விரும்புபவர்களாகவே இருத்தல்கூடும். அதை நாம்மறுக்கவில்லை. ஆனால், கலப்பில்லாத கம்யூனிஸம் சமாதானத்தை விரும்புவதல்ல. போர்புரிந்து மனிதர்களை அடிமைகளாக்குவதையே கம்யூனிஸம்விரும்புகிறது. பின்லாந்

தார்பு-லார்து மேற்றிராணியாராகிய மகாவந். தெயாஸ் ஆண்டவரவர்கள் விடுத்த நிருபத்தின் சாரம்.

தைத்தாக்கியதும், பால்திக்நாடுகளை ஆக்கிரமித்துக்கொண்டதும், போலாந்து, ருமேனியா, ஹங்கேரி, செக்கோசிலவாகி நாடுகளை அடிமைப்படுத்தியதும் இதற்குச்சான்றுகளாகும்.

கம்யூனிஸம் வெற்றிபெற்றால், உலகசரித்திரம் அழுத்தந்திருத்தமாகக் கண்டனஞ்செய்துள்ள ஒருகட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவருவதாகும். இலட்சக்கணக்கான மக்களை ஈவிரக்கமின்றிக் கட்டாயவேலை வாங்கிக் குன்றுகளைப் போன்ற 'பிரமிட்' கோபுரங்களை எழுப்பிய பார்வோன்மன்னர்களின் ஆட்சி — மக்களால் அரசன் வணங்கப்படத்தகுதியுள்ள தெய்வம்என்றசெசார்மன்னர்களின் ஆட்சி— ஆகியவற்றைப்போன்ற அரசாங்கத்தை மீண்டும் ஏற்படுத்துவதாகும்.

கம்யூனிஸத்திட்டத்தில் திருச்சபைகண்டனஞ்செய்வது, அநீதியுள்ள ஒருசமூகஅமைப்பைக் கம்யூனிஸம் தாக்குவதையல்ல; ஆனால், அதன் நாஸ்திகக்கொள்கையையே திருச்சபைஎதிர்க்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் சொன்னது உண்மையே

ஆவணிமாதத்தில் ஒருநாள். அன்று ரோமைநகரிலே வெயில்அதிகம். மக்கள் யாவரும் வெயிலுக்குப்பயந்து வீட்டினுள் ஒளித்திருந்தனர்போலும். வீதிகளில் அதிகநடமாட்டமில்லை. நன்கு உடைதரித்த ஒருவர்மாத்திரம் ஒவ்வோர் வீட்டு வாசலுக்குமுன்னும் போய்நின்று, மூக்குக்கண்ணாடியை உயர்த்தி, வீட்டுவிலாசங்களை வாசிப்பதில் முனைந்துநின்றார். கடைசியாக ஒருவீட்டு விலாசத்தை அவர்பார்த்தபின் அவ்வீட்டைநோக்கினார். "நான் தேடிவந்த பிரபலசிற்பியின்வீடு இதுவாயிருக்குமா?" எனச் சந்தேகத்துடன் தம்மையேகேட்டார். உள்ளே தொங்கிய ஒருபலகையில் "தொழிற்சாலைக்குத் தோட்டத்தின்வழியாய்ப் போகவும்" என்று எழுதியிருந்தது. அந்தத்தொழிற்சாலையில் ஏராளமான சுரூபங்கள் முடிந்தும், முடியாமலும் இருந்தன. கிறிஸ்துநாதரினதும், அவர் மாதாவினதும் உருவங்கள்தான் எங்குங்காணப்பட்டன. அவைகள்மத்தியில் ஒருவர் தலைகுனிந்து ஏதோ செதுக்கிக் கொண்டிருந்தார்.

"அக்டெர்மன்என்னும் சிற்பி நீங்கள்தானா?" என்று வந்தவர்கேட்டார்.

"என்பெயர் அக்டெர்மன்" என்ற சுருக்கமான பதில்கிடைத்தது.

"நான் டொகோல்ஜுகோவ் பிரபு. பெடோறு அரசி இந்தத்தொழிற்சாலையைத் தரிசிக்க வரப்போகிறாள். இதைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி என்னை அனுப்பினாள்."

சிற்பியோ இலேசாகத் தலைபணிந்து பின்னர்முன்போல வேலையில்ஆழ்ந்தார். பிரபு சுற்றிலும்நோக்கினார். தளவாடங்கள்ஒழுங்கின்றி அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன. "அரசிவருகிறாளே; இடத்தைச்சற்றுவது ஒழுங்குபடுத்த வேண்டாமா?" எனப் பிரபு மெதுவாகப் பேசத்தொடங்கினார், வேண்டாம் என்பதன் குறிப்பாகச் சிற்பி தலையை அசைத்து, "எவ்விதமுஸ்திப்புமதேவையில்லை; எந்நேரமும் அரசிவரலாம்" என்றார்.

பிரபுவுக்கு அதிசயமாயிருந்தது. அரசி தொழிற்சாலைக்குவருவதுபெருமகிமை; இந்தச்சிற்பியோ அதைப் பொருட்படுத்துவோராகத் தோன்றவில்லை எனத் தமக்குள் சொல்லிக் கொண்டார். அவர்போனபின் சிற்பி தமதுதொழிற்சாலையைக் கவனித்தார். "சாமான்களையெல்லாம் ஒழுங்குபடுத்துவது நலம்என்றுநினைக்கிறேன்; பெடோறுஅரசியைப் போன்றவர்கள் ஒவ்வொரு நாளும வருவதில்லையே; ஆனால், இந்தஅரசியைவிட உயர்ந்தவர்களும் இங்குவந்திருக்கிறார்கள்...." எனக் கூறிக்கொண்டே அங்குமிங்கும் சிதறிக்கிடந்த சிலவற்றை ஒழுங்குபடுத்தினார். இருஆண்டுகளுக்குமுன் ஒன்பதாம்பத்திநாத பாப்பானவர் அங்கு சென்றிருந்தார். சிற்பி செய்திருந்த வியாகுல அன்னையின் சுரூபத்தைப் பார்க்கவே அவர்வந்தார். அவர்உட்காரக் கைபிடியுள்ள ஓர் நாற்காலி போடப்பட்டிருந்தது. அந்தநாற்காலியை அரசி உட்காரும்படி கொண்டுவரலாமா? அதுகூடாது. அதன்மேல் பட்டுத்துணி விரித்து அதைவெகுபூச்சியமானபொருளாகச் சிற்பிவைத்திருந்தார். பாப்பானவர் அதில்அமர்ந்தபின் எவரும் அதில் உட்காரவில்லை. கைபிடியுள்ளநாற்காலி பெடோறுஅரசிக்குத் தேவையில்லை. பிறெடெறிக்அரசர்முதலாய்ச் சின்ன நாற்காலியில் உட்கார்ந்துதானே மாதாவின்சுரூபத்தை நோக்கினார். பெடோறுஅரசிக்கும் சின்னநாற்காலி போதும் என இவ்வாறு சிற்பி ஆலோசிக்கலானார்.

அவர்பிறந்தஇடம் மன்ஸ்றர்நகரம். அங்குள்ள மேற்றிராசனக் கோவிலில் வைப்பதற்கென்று வியாகுல அன்னையின் சுரூபம்ஒன்றை அவர்செய்தது முதல் அவரதுபுகழ் உலகெங்கும்பரவியது. அவரைப்பார்க்கப் பெரியமனிதரும், பிரபுக்களும், அரசரும்வந்தனர். அவர்களின்வரவைச் சிற்பி மகிமையாய் மதிக்கவில்லை. அத்துணை திறமையுள்ள சிற்பியான அக்டெர்மன் கடவுளின் அதிமிகதோத்திரத்துக்கும், மகிமைக்கும் அடுத்த உருவங்களைத்தவிர வேறெதையும் ஏன்செய்வதில்லையெனப் பலரால் கண்டுபிடிக்கமுடியவில்லை. பிரபலசிற்பியான அவர் சந்நியாசிபோல் சீவித்தார். சலவைக்கற்களிலிருந்து உருவங்கள்செய்வதைச் செபமாக மாற்றிவந்தார். இந்தஇரண்டையும் எவ்விதம் செய்யமுடியும் என்பதை அநேகரால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

சிற்பியின் தகப்பனார் ஓர்கமக்காரர். ஆயின் அவரோ தச்சுவேலைசெய்து வந்தார். ஆனால், செல்வாக்குள்ள ஒருவரின்தயவால் இவர் பேர்போன சிற்பிகளிடம் கற்கமுடிந்தது. பேரும் புகழும் அவரைநாடிவந்தன. இதற்கெல்லாம்நன்றியாக ரெல்க்ற என்னுமிடத்திலுள்ள தேவதாயின் சுரூபத்துக்குமுன்பாக அவர் அந்தஅன்னைக்கு ஒருவாக்களித்தார். "தாயே, நீர் செய்தபேருதவிக்கு நன்றியாக இனிமேல் உம்முடையவும், உம்திருமகனுடையவும் உருவங்களையே செய்வேன்; எளியவாழ்க்கை நடத்துவேன்; என்வேலையைச் செபமாக மாற்றுவேன்" என்றார். அவர் தமதுதீர்மானத்தில் உறுதியாய்நின்றமையால் அநேகசமயங்களில் பட்டினியால் வாடவேண்டியவரானார். ஆனால் ஒப்பற்ற மனஅமைதியும், ஆனந்தமும் அவரைவிட்டகலவில்லை.

சிற்பி தம்கடந்தகால வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்கலானார். வாழ்க்கையில் பலமாற்றங்களைக் கவனித்தார். ஒருகாலத்தில் அவர் தமதுதகப்பனாரின்பன்றிகளை மேய்த்துக்கொண்டிருந்தார். இன்று ஓர்அரசியே அவரைப் பார்க்க வருகிறாள். ஆயின் அவர் அதைச் சட்டைபண்ணவில்லை. பெடோறுஅரசி எதற்காக வருகிறாள் என்பது அவருக்குத்தெரியும். வியாகுல அன்னையின் சுரூபத்துக்கருகில் வைக்கும்படி சிற்பி பரலோகஇராக்கினியின் சுரூபம்ஒன்றைச் செய்திருந்தார். அதைப்பார்க்க அநேகர்வந்தனர். தமதுவேலையைப்பார்த்து அதிசயித்தவர்களை அவர் விரும்பவில்லை. யாராவது சுரூபங்களைவாங்கவேண்டும். இதற்குமுன் அவர் பலதடவைகளிலே பணமின்றிச் சங்கடப்பட்டதுபோல் இப்பொழுதும் பெருஞ்சங்கடமான நிலையில்இருந்தார். ஒருதுண்டுறொட்டி வாங்குவதற்குமுதலாய் அவர்கையில் பணம்கிடையாது. பரலோகஅன்னையின் சுரூபத்தைச்செய்வதற்காக அவர் கராராஎனுமிடத்திலிருந்து றோமைக்குக்கொண்டுவந்த கல் மிக விலைஉயர்ந்தது. வழிச்செலவும் அதிகம். ஏராளமானவேலையாட்கள் அதைத் தூக்கிக் கொண்டுவர வேண்டியிருந்தது. சுரூபம் வெகுநேர்த்தியாக அமைந்தது. தேவதாயே அவரதுகரங்களை நடத்தி அமைத்தாற்போல் இருந்ததுஅந்தச் சுரூபம். அந்தச்சுரூபத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவர்உள்ளத்தில் ஓர் ஆனந்தமும், அன்பும், நன்றியும் உதித்தன.

திடீரென அறையின் கண்ணாடிக்கதவு திறக்கப்பட்டது. சிற்பி விழித்துப் பார்த்தார். "பெடோறுஅரசி வருகிறாள்" என டொகோல் ஜுகோவ் பிரபு அறிவித்தார். சிற்பியைஅரசிசிறிதுநேரம் கூர்ந்துகவனித்தாள். பின்னர் அவரையணுகித் தன்கையைநீட்டி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

— ச. ஞா. தூ. —

# சுதேச வர்த்தமானம்

## தற்காலிக சபைமுதல்வர்

பாராளுமன்றபிரதிநிதிகள்சபையின் முதல்வரும், போக்குவரத்து மந்திரியாருமான சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் ஒற்றுவாநகரில் நடந்தேறவிருக்கும் சாம்பிராச்சிய பாராளுமன்ற மகாநாட்டுக்குச் சமுகமளிக்குமாறு சென்றபுதன்கிழமை அங்கு பயணமாயினமையால் அவரிடமாகக் கைத்தொழில்–கடற்தொழில் மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தற்காலிகசபைத்தலைவராக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். போக்குவரத்துக்கடமைகளைப் பிரதமரே கவனித்துவருவார்.

## மன்னார் உபஏசன்றர்

மன்னார் உதவிஏசன்றாய் இருந்துவந்தவரான திரு. ஏ. ஈ. கோகர்லி மொறகொட அவர்கள் உள்நாட்டுமந்திரிகாரியாலய உதவிக்காரியதரிசியாக மாற்றப்பட்டமையாலே அவரிடமாக உணவுக்கட்டுப்பாட்டு உப அதிகாரியான திரு. சி. ஜே. செறசிங்க அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

## மந்திரியாரின் எச்சரிக்கை

நிலைமையைக் கவனித்து அதற்கேற்றவாறுநடந்து பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியைச் சனங்கள் குறைத்துச் சாப்பிடாவிடின் அரசாங்கம் அரிசியின்விலையைஉயர்த்தி அதன்மூலம் அரிசிப்பாவனையைக் குறைக்கவேண்டியதாகுமென நிதிமந்திரியார் ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் எச்சரிக்கை செய்திருக்கின்றார். இறக்குமதிசெய்யப்படும் அரிசிக்குத் தற்போது இறுக்கப்படுகின்ற பெருந்தொகைப்பணத்தைச் செலவிட அரசாங்கத்தால்முடியாது; அதனால் எல்லாவேளைப் போசனத்திலும் அரிசியைப்பாவியாது அதற்குப்பதில் பலாக்காய், மற்றும்சுதேச உணவுப் பொருட்களைப் பாவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்; சனங்கள் அதிகமானஉணவுப்பொருட்களை உற்பத்தி செய்து, அத்தாலே தேயிலை, றபர், தேங்காய்முதலாம் ஏற்றுமதிப்பொருட்களின்விலைகள் இறங்கிக்கொண்டிருக்கின்ற இந்தக்காலத்திலே இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருட்களுக்கு உயர்ந்தவிலை கொடுத்துவருகின்ற அரசாங்கத்துக்கு உதவிசெய்வது மிகமிக அவசியமாகும்; நானும் ஒவ்வோர் காண்டி அரிசிச்சாதத்துக்கும் இரண்டு காண்டி பலாக்காய் அல்லது முருங்கைவென்ன சாப்பிட்டுவருகிறேன்; மற்றவர்களும் எனது முன்மாதிரிகையைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்; அன்றேல் அரிசியின் விலையை ஏற்றவேண்டிவருமென்றும் மந்திரியார் கூறி எச்சரித்தனர்.

## மதுவிலக்குப் பிரசாரசபை

உடுப்பிட்டி மதுவிலக்குப் பிரசாரசபையின் கூட்டம்ஒன்று சென்ற 4-ந் திகதியன்று அங்குள்ள அமெரிக்க மிஷன் கல்லூரிமண்டபத்தில் நடந்தேறியது. அதிலே மாவரியின் கெடுதிகளையும், மரமேறும் தொழிலாளர்களின்வாழ்க்கைதரத்தை உயர்த்தும் வேறுவழிவகைகளையும்பற்றி ஆலோசிக்கப்பட்டது. வடமாகாணத்திலே அடுத்தபுரட்டாசிமாத நடுப்பகுதியில் மதுவிலக்கு வாரம்ஒன்றைக் கொண்டாடவும், மதுவிலக்குத் துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டுப்பரப்பும் முறையைக் கையாளவும், "சமூகத்தொண்டன்" பத்திரிகையில் சிறுவர் மதுவிலக்குக் கட்டுரைப் போட்டி ஒன்றைத் தொடக்கவும், இதில் ஈடுபடுமாறு பாடசாலைமாணவர்களை உற்சாகப்படுத்தவும் வேண்டுமென அக்கூட்டத்திலே பேசப்பட்டது.

## அம்புலன்ஸ் மோட்டர் வள்ளம்

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, ஆகியதீவுகளில் இருக்குமமக்களுக்குக் கடினநோய் ஏற்படுமிடத்து அவர்களைத் தீவிரமும், சேமமுமான சிகிச்சைக்கென்று யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிவர ஓர் "அம்புலன்ஸ்" மோட்டர்வள்ளம் சமீபத்தில்உதவப்படவிருக்கிறது. முன்சொன்னநான்குதீவுகளிலும் முப்பதினாயிரம்மக்கள்வரையிலே வசிக்கின்றார்கள். இந்தத்தீவுகள் எல்லாவற்றிலும் அரசாங்க வைத்திய சேவை அருளப்படுகின்றது. ஆனால், சத்திரவைத்தியத்திற்கும், விசேஷ சிகிச்சைக்குமாக நோயாளிகளை ஊர்காவற்றுறை அல்லதுயாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. தற்போது இந்தத்தீவுகளிலிருந்து அவர்கள் சாதாரணமோட்டர் வள்ளங்களிலேயே ஏற்றிக்கொண்டுவரப்படுகின்றார்கள். அதனால் அவர்களுக்குக் கஷ்டமும்ஆபத்தும் ஏற்பட இடமுண்டாகிறது. இப்புதிய "அம்புலன்ஸ்" மோட்டர் வள்ளத்திலே நோயாளிகள் படுப்பதற்கென இருபடுக்கைகளும், அவர்களைவைத்துத் தூக்கிச்செல்லும் மூன்றுசாதாரண தட்டுகளும் இருக்கின்றன. இன்னும் ஆறு நோயாளிகள் இருப்பதற்கான இடவசதியும் இருக்கின்றது. தீவுப்பகுதிகளுக்கு வேண்டியமருந்துவகைகளை ஏற்றிச்செல்வதற்கும் அதிகாரிகள் இந்தமோட்டார்வள்ளத்தை உபயோகிப்பார்கள்.

## கோவிலுக்கு நன்கொடை

பிரபலவர்த்தகரும், பந்தையக் குதிரைகளின் சொந்தக்காரரும், மசியாவாவிலுள்ள வயோதிகர்சாலையின் தலைவியான சங். சிஸ்றர் வான்ஸ்ராறெக்ஸ் கன்னிகாஸ்திரீயின் சகோதரருமான திரு. எம். ஹான்ஸ்வான்ஸ் ராறெக்ஸ் அவர்கள் கலவெலாவுக்குச் சமீபமான மனிங்கமுவாஎனும் தென்னந்தோட்டத்திலே நாலில் ஒருபங்கைகவகக் கோட்டையிலுள்ள அர்ச். அந்தோனியாரின் புராதனகோவிலுக்கு நன்கொடையாக வழங்கியிருக்கின்றார். இந்தத்தோட்டம் 1,253 ஏக்கர் விஸ்தீரணமுடையதாகும்.

## கண்டிஅரசனின் வழித்தோன்றல்

தான் கண்டிக்கடைசிஅரசனின் நேர்வழித் தோன்றலென உரிமைபாராட்டுகிறவரும், தெகிவலையிலுள்ள அரசினர் மத்தியகலாசாலையில் ஓர் ஆசிரியராகத் தற்போது இருந்துவருகிறவரும், 25 வயசுடையவருமான ஸ்ரீ யோகானந்த இராசசிங்க என்பவர் விவாகஞ்செய்து கொள்ளுமாறு தென்னிந்தியாவுக்குச் சென்றிருக்கின்றார், இவர் அங்கே மன்பிரபாத் இராசகுடும்பத்தைச் சேர்ந்த 20 வயசுடைய சூஷிலா தேவினிஎனும் மாதை இம்மாதம் 15-ந் திகதி விவாகஞ்செய்துகொண்டு தமது பாரியாருடன் வருகிறபுரட்டாசியிலே இலங்கைக்குத் திரும்பவிருக்கின்றார்.

## அரவந்தீண்டிய மரணம்

மீசாலை தெற்குவாசியான 41 வயசுடைய பெரியதம்பி வேலுப்பிள்ளைஎன்பவர் சென்றவெள்ளிக்கிழமை விஷசர்ப்பந்தீண்டி இறந்துவிடவே, அதுவிஷயமாய்த் திடீர்மரணவிசாரணைகாரர் அங்குசெல்லாமுன்னரே அவரின்பிரேதகனத்துக்கும்,பிரேதத்தை மயானத்துக்குக் கொண்டுசெல்வதற்கும் வேண்டியஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. அப்போது மரணவிசாரணைகாரர் பேசியபோது: சர்ப்பந்தீண்டிய எந்தஒருவரினதும் பிரேதத்தை 24 மணிநேரத்துள் தகனஞ்செய்யப்படாதெனத் தெரிவித்து, புராதனவழக்கத்திலுள்ள சிலகாரியங்களை எடுத்துக்கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### நூற்றண்டுவிழாப் பிரதிநிதிகள்

அப்போஸ்தலரான அர்ச். தோமையார் இந்தியாவுக்குவந்த 19-ம்நூற்றுண்டு விழாவினதும், அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பரமபதமடைந்த 4-ம்நூற்றுண்டுவிழாவினதும் ஞாபகார்த்தமாக எர்ணக்குளத்திலே மார்கழிமாதம் நடக்கும் பக்திச்சிறப்பான கொண்டாட்டங்களுக்குத் தமது பிரதிநிதியாக ஆஸ்திறேலியாவைச்சேர்ந்த சிட்னிநகர் அதிமேற்றிராணியாரான கருதினல் நோர்மன் கில்ரோய் ஆண்டவரைப் பரிசுத்த பாப்பரசர் தெரிவுசெய்திருக்கின்றார். அர்ச். பிரான்சீஸ் சவேரியாருக்குத் தோத்திரமாகக் கோவைநகரில் நிகழவிருக்கின்ற கொண்டாட்டங்களுக்குப் பாப்பரசரின் பிரதிநிதியாக லிஸ்பன்நகரின் பத்திறியாக்குவான கருதினல் இம்மானுவேல் கொன்சால்வெஸ்செறெஜேய்ரு ஆண்டவர் தெரியப்பெற்றிருக்கின்றார்.

### பாப்பரசரைத் தரிசித்தவர்கள்

நிகழும் 1952-ம் ஆண்டின் முதல் ஆறுமாதங்களிலும் பரிசுத்தபாப்பரசர் கருதினல்மார் முதல் சாதாரண யாத்திரிகர்கள் வரையிலே சுமார் மூன்று லட்சம் மக்களுக்குப் பேட்டியளித்திருக்கிறாரென வத்திக்கானிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இன்னும் அதே காலத்தில் அவர் உலகின் பல்வேறு நாடுகளைச்சேர்ந்த கத்தோலிக்கமக்களுக்கு 40 முக்கியமான சொற்பொழிவுகளும், வானொலிப்பேச்சுகளும் நிகழ்த்தியிருக்கின்றார். மேலும் அவர் சென்றவருட ஆனிமாதம் பெருமிதஆடம்பர வைபவங்களுடன் முத்திப்பேறுபெற்றபட்டம்அருளிய பத்தாம்பத்திநாத பாப்பானவரின் கல்லறைமுன்பாக அர்ச். பேதுருவானவர் மகாலயத்தில் இவ்வாண்டின் முதல் ஆறுமாதகாலத்திலும் பத்து லட்சம்மக்கள் செபஞ்செய்திருக்கின்றார்கள்.

### அல்போன்சா கன்னியாஸ்திரி

தனது அற்புதசலிகைகளாலே தென்னிந்தியாமுழுவதிலும் சமயபேதமின்றிப் பிரஸ்தாபமாக அறியப்பட்டுள்ள சங். அல்போன்சா கன்னியாஸ்திரி மரணமடைந்த ஆறும் ஆண்டு நிறைவுவிழா சென்றஆடிமாதம் 28-ந்திகதியன்று அவளது கல்லறை இருந்துவருகின்ற பாரனன்ஞானம் எனுமிடத்திலே கொண்டாடப்படலாயிற்று. அதற்கு இருபத்தையாயிரம் யாத்திரிகர்கள்வரையிலே சமுகமாயிருந்தார்கள். அல்போன்சாவின் திருமேனி இருந்துவருகின்ற சேமக்காலைச் சிற்றாலயத்தின் மூன்று பீடங்களிலும் அன்றுகாலை 4-30 மணிமுதல் 9-30 மணிவரையில் திவ்விய பூசைகள் நிறைவேறின. அல்போன்சாபிறந்த இடமாகிய குடமலூரிலிருந்து சென்ற குருமாரால் துக்கப்பாடற்பூசை ஒன்றும் நிறைவேறலாயிற்று. அங்குசமுகமான குருமாரையும், விசுவாசிகளையும்தவிர, பல்வேறுசபைகளையுஞ்சேர்ந்த 500 பேருக்குமேற்பட்ட கன்னியாஸ்திரிமாரும் அன்றுதினம் அல்போன்சாவின் கல்லறையைத் தரிசித்தார்கள். யாத்திரிகர்களுள் ஏறக்குறையச் சகலசமயத்தினரும் அடங்கியிருந்தார்கள்.

### ட்றூமனின் வத்திக்கான்தூதுவர்

வத்திக்கானிலே அமெரிக்க றூஸ்வெல்ற், ட்றூமன் ஜனதிபதிகளின் பிரத்தியேக பிரதிநிதியாக முன்னர் இருந்துவந்த திரு. மைறன் ரெய்லர் அவர்கள் சென்றமாதம் ஐரோப்பாவிலிருந்து நியூயோக்நகர் போய்ச்சேர்ந்தபோது, திரு. ட்றூமன் அவர்களிடமிருந்து ஓர் விசேஷதூதாக வத்திக்கானுக்குத் தாம் சென்று திரும்பியதாகத் தெரிவித்தனர். பரிசுத்தஸ்தானத்தினிடமாக அமெரிக்கஐக்கிய தேசத்தின் முதல்ஸ்தானிகராக ஜெனறல் மாக்கிளாக் அவர்களை ஜனதிபதி ட்றூமன் சென்றவருடம் நியமனஞ்செய்தார். ஆனல், புறொட்டஸ்தாந்தர் ஆட்சேபித்த காரணமாக ஜெனறல்கிளாக் அப்பதவியை ஏற்க மறுததுவிட்டார். அதனல் தாம்பிந்த மற்ருெருவரை நியமனஞ்செய்வதாக திரு. ட்றூமன் அவர்கள் கூறலாயினர்.

### மனந்திரும்பிய பாதிரிமார்

சென்றமகாயுத்தமுதல் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்ட பாதிரிமாரின்தொகை அதிகரித்திருப்பதாக வண. ஜேம்ஸ் லெய்ற்றிம் சுவாமியார் சமீபத்திலே ஹலிபாக்ஸ்நகரில் பேசியபோது தெரிவித்திருக்கின்றார். நாஷ்டம் எனுமிடத்துப் புறொட்டஸ்தாந்த சந்நியாசமடத்தில் இருந்துவந்த அங்கிளிக்கன் ஆசீர்வாதப்பர்சபையினருள் அநேகர் சமீபகாலத்தில் மனந்திரும்பியிருக்கின்றனர். அங்கிருந்துவந்த டக்றர் கிறெகோறிடிக்ஸ் என்னும் பேரானகல்விமான் சமீபத்திலே மரிக்குமுன் அவரது வேண்டுகோளின்பேரிலே டவுண்சைட்டின் கத்தோலிக்கமடாதிபர்சென்று மரணப்படுக்கையிலே அவரைச்சந்தித்துத் திரும்பினர். பிறிஸ்ரலிலே மனந்திரும்பிய ஓர் விசாரணைப் பாதிரியாருக்கு ஆறுபிள்ளைகள் இருக்கின்றார்கள்.

### 26-வது குருசிரேஷ்டர்

நான்குமாதகாலம் சிறைவைக்கப்பட்டிருந்தபின் நவிநகரின் மேற்றிராணியாரான லாகொஸ்ரே ஆண்டவர் சீனக்கம்யூனிஸ்த அரசாங்கத்தால் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டிருக்கின்றார். சீனவிலிருந்து நாடுகடத்தப்பட்ட 26-வது குருசிரேஷ்டர் இவராவர். சீனவின் அதிகம் மேற்குப்பகுதியிலுள்ள மேற்றிராசனத்தைப் பரிபாலனஞ்செய்துவந்த இவர் வண. டொமினிக் பூக்குலெற், வண. ஜோவக்கீம் ஸ்பினிஎனும் தமது குருமாருள் இருவருடன் அங்கிருந்தும் வெளியேறினர். கம்யூனிஸ்தர்கள் அடிப்படுத்துமுன் இவரது மேற்றிராசனத்திலுள்ள 8,000 கத்தோலிக்கர் மத்தியிலே 18 குருமாரும், இருபிறதர்மாரும் தொண்டாற்றி [illegible]கள்.



பத்திமாகிரி — பண்டத்தரிப்பு

## மாசில்லா இருதயமாதா திருநாள்

### ஆவணி 22-ந் திகதி வெள்ளிக்கிழமை

பத்திமாகிரியிலே நிகழும் ஆவணிமாதம் 22-ந் திகதி வெள்ளிவாரம் சென்றவருடங்களிற்போன்று மாசில்லாத இருதயமாதா திருநாள் கொண்டாடப்படும். இது பத்திமாகிரியின் முக்கியமானதிருநாளாகும். ஏனெனில், பத்திமாகிரி ஆலயம் மாசில்லா இருதயமாதாவுக்கே ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. திருநாளன்று காலை 7 மணிக்குப் பாடற்பூசையும், பின்னேரம் 4-30 மணிக்குச் சிறியசுரூபத்தோடு சுற்றுப்பிரகாரமும் நடந்தேறும். பத்திமாமாதாவின் அன்பர்கள்எல்லோரும் அழைக்கப்படுகின்றனர். திருநாளுக்குஆயத்தமாகத் திரிதினஆராதனை நடைபெறும். இது 19-ந் திகதி சாயந்தரம் 6-45-க்கு மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரத்துடன் ஆரம்பமாகும்.

பத்திமாவிலே மாதாஅறிவித்த செய்திகளை அறிந்தவர்களெல்லாம் மாதாவின் மாசில்லா இருதயப்பத்தி உலகமடங்கலும் பரவவேண்டுமென்பதை அறிவார்கள். பத்திமாவிலே மாதா அருளிய காட்சியொன்றில் லூசியாவுக்கு அறிவித்ததாவது: "என்னுடைய மாசில்லா இருதயப்பத்தி உலகமடங்கலும் பரம்பவேண்டுமென்பது எனது திருக்குமாரனின் விருப்பம்" என்பதே.

தேவதாயின் மாசில்லா இருதயஅரசாட்சி பரம்புவதற்குத் தீவிரவழி யாதெனில், தினந்தோறும் செபமாலைசொல்லி வருவதேயாம். 1917-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந் திகதி மாதா காட்சியளித்தபோது: "நானே செபமாலையின் இராக்கினி; சனங்கள நாள்தோறும் செபமாலைசொல்லுவதே எனது விருப்பம்" எனத் திருவாய்மலர்ந்தார். செபமாலைசொல்லுவதில் உத்தமமானது குடும்பசெபமாலை சொல்லுவதேயாகும். "ஒருமித்துச் செபமாலைசொல்லும்குடும்பம் எப்போதும் ஒருமித்திருக்கும்" எனும் இந்த வசனம் உலகிற்குச் சமாதானத்தைக் கொண்டுவருவதாய் இருக்கவேண்டும். சென்றவருடம் ஆவணிமாதம் 22-ந் திகதி யாழ்நகர் மேற்றிராணியார் பத்திமாகிரி அடங்கியுள்ள மேற்றிராசனத்திலே குடும்பசெபமாலைக் கூட்டத்தைத்தொடக்கினர். இந்தப் பத்தி விருத்தியடைந்துவருகின்றது. இதுதிருப்தியாயிருக்க இன்னும்அதிகவேலை செய்யவேண்டும். குடும்பசெபமாலைப்பத்தியில் சேராதகுடும்பங்கள் தங்கள்பெயர்களைத் தெரிவிக்கும்படி தயவாகக் கேட்கப்படுகின்றன. இவர்கள் மேற்றிராசனமேய்ப்பரின் விருப்பத்தை நிறைவேற்றித் தேவ ஆசீர்வாதத்தையும் பெறுவார்கள். இதைப்பற்றி இன்னும் அறியவேண்டுமானல் பின்வரும்விலாசத்திற்கு எழுதவும்.

கட்டளைக்குரவர்,
பத்திமாகிரி,
பண்டத்தரிப்பு.

பணவசதி

யாழ்ப்பாணப் பட்டணத்திலுள்ள காணிக்கு ஈட்டுக்கு காசுகொடுக்கப்படும்.

விபரம்: D. இராசதுரை
பிறக்ரர் & நொத்தாரிஸ்
10—1-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

### ஆவணிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 15 | தேவமாதா பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாள் (கடன்) | (வெ) |
| சனி | 16 | அ. சுவக்கீன் | (வெ) |
| ஞா | 17 | இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 11-ம் ஞாயிறு — அ. ஹயசெந் திமமான்ஸ் | (ப) |
| திங் | 18 | அ. அகப்பித்தப்பர் | (வெ) |
| செ | 19 | அ. இயூட் அருளப்பர் | (வெ) |
| புத | 20 | அ. பெர்நார்து | (வெ) |
| வி | 21 | அ. ஷாந்தால் அருளாயி பிரான் சிஸ்கம்மாள் | (வெ) |

சத்தியவேத
பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
ஆவணி மாதம் 14 -ந் திகதி

## சங். அல்போன்சா கன்னியாஸ்திரி

உலகம் எக்காலத்திலாவது கண்ட மகாகீர்த்திவாய்ந்த அப்போஸ்தலர்களில் அர்ச். தோமையார், அர்ச். பிரான்சீஸ் சவேரியார்எனும் இருசுத்தவாளரையுமிட்டு இந்தியா பெருமை பாராட்டுவதும், அவர்களைப் பேரன்புடன் வணங்கிப் பக்தி செய்வதும் முற்றிலும்நியாயமே. இந்தஅப்போஸ்தலர்கள் இருவரும் இந்தியாவிலே கிறீஸ்துநாதரின் சுவிசேஷத்தைப் போதித்து ஆற்றியுள்ள ஆன்ம தொண்டுகளாலே அதன மக்களில் பலலட்சக்கணக்கானேர் இப்போது பரலோகபேரின்பத்தை அனுபவிக்கிருர்களென்று சொல்லவேண்டியதில்லை. ஆனல், இவர்களின் நூற்றூண்டுவிழாக்கள் அங்கு பெருமிதமாகக் கொண்டாடப்படவிருக்கும் இச்சுபசந்தர்ப்பத்திலே இவர்கள் தொண்டாற்றிய இந்திய புதல்வர், புதல்விகள் மத்தியில் ஒருவராவது திருச்சபைப் பலிபீடங்களின் மகிமைக்கு இன்னுமே உயர்த்தப்படாதிருப்பது பெரிதும்கவலைக்குரியதே. என்ருலும், இந்திய புதல்விகளில்ஒருவர் எதிர்காலத்தில் இந்தப்பலிபீடமகிமைக்கு உயர்த்தப்படுவாரென எதிர்பார்க்கப்படுவதானது பெரிதும் மகிழ்ச்சி உண்டுபண்ணுவதே.

இற்றைக்கு ஆறுவருடங்களின்முன்னே, அதாவது 1946-ம்ஆண்டு ஆடிமாதம் 28-ந் திகதியன்று மலையாளத்தைச் சேர்ந்த பாரனன் ஞானம்எனுமிடத்து கிளாருசபைக் கன்னிகாமடத்திலே மரணமடைந்த அல்போன்சா கன்னிகாஸ்திரியின் பெயரைக் கேள்விப்படாதவர்கள் மலையாளத்தில் எவருமே இருக்கமாட்டார்கள். அவளின்கீர்த்தி மலையாளத்தினதும் இந்தியாவினதும் எல்லைக்குள் மாத்திரமல்ல, ஏனையநாடுகளிலுமே பரவியுள்ளது. அதனல் அவள் திருச்சபையாலே ஓர் அர்ச்சியசிஷ்டவளெனப் பிரகடனஞ்செய்யப் படுவதைக்காண இந்திய கத்தோலிக்கமக்கள் பெருங்காதல் கொண்டுள்ளார்கள். அர்ச். தோமையாருடையவும், அர்ச். பிரான்சீஸ் சவேரியாருடையவும் சலிகையாலே எல்லாம்வல்ல இறைவன் தங்கள் ஆசையை விரைவில் பூர்த்தி செய்வாரென நம்பிக்காத்திருக்கின்ருர்கள்.

சங். அல்போன்சா அம்மாள் தனது அற்புதசலிகைகளாலே அடைந்துவரும் கீர்த்திப்பிரதாபத்தை அறியவந்தகிழைத்தேச திருச்சபைத் திருச்சங்கத்தின் காரியதரிசியான கருதினல் திசறன்ற்ஆண்டவர் அவளுக்குமுத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைக்காணத் தாம் ஆசிப்பதாகச் சென்றவருடம் ஓர்செய்தி அனுப்பியிருந்தார். அதனல்இதுசம்பந்தமாய் விசாரணை நடத்துமாறுஅவள் மரணமடைந்த ஐந்தாவது ஆண்டு நிறைவுதினமன்று நிறுவப்பெற்ற ஓர் கம்மிஷன் அவ்வாண்டு ஐப்பசிமாதம் 11-ந் திகதி தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அத்துடன் எல்லாம் முடிவடையவில்லை. முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டுவிக்கும்விஷயமாய்த் திருச்சபை விதித்துள்ள நியாயமானுசாரங்களையெல்லாம் நிறைவேற்றியாகவேண்டும். அதனல் இன்னுஞ்சிலவருடகாலம் எல்லோரும் பொறுமையாய் இருந்துவரவேண்டும்.

அர்ச். அல்போன்சாஅம்மாள் அனுசரித்துவந்த புண்ணியங்கள் வீரபரித்தியாகமுறையில் அனுசரிக்கப்பட்டனவா என்பதைஅறிய அவளது வாழ்க்கை வரலாறு சரிவர ஆராயப்பட வேண்டும். அவள்சலிகையால் நடந்தேறிய முதல்வரிசைக்குரிய இருபுதுமைகள் சந்தேகமறஅத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளப்படுமுன் எவருக்காவது வழமையிலே அர்ச்சியசிஷ்டர்களுக்குக் காண்பிக்கப்படும் வணக்கமரியாதை காண்பிக்கப்படாதுஎன்ற திருச்சபைப்பிரமாணத்தை அனுசரித்து இவைகளெல்லாம் நடைபெறவேண்டும். அவற்றிற்கெல்லாம் காலம்வேண்டும். விசாரணைகளுக்கும், பிறவற்றுக்குமாகப் பெருந்தொகைப்பணம் வேண்டும், தான் பரமபதமடைந்த ஆறுவருடகாலத்துள் தனது பிரமிக்கத்தகுந்த அற்புதசலிகைகளாலே கத்தோலிக்கர், புரொட்டஸ்தாந்தர், இந்துக்கள், முஸ்லீம்களென்ற சமயபேதமின்றிப் பல்லாயிரவரைத் தனதுபக்தர்களாக்கிக்கொண்ட சங். அல்போன்சா கன்னிகாரத்தினத்தைச் சருவேசுரன் மகிமைப்படுத்த அதிககாலம் செல்லமாட்டாதெனவே நம்புகின்ரேம்.

—அர்ச். பிரான்சீஸ் சவேரியார்பரமபதம்அடைந்த நான்காம் நூற்றூண்டு ஞாபகார்த்தவைபவங்கள் மார்கழிமாதம்கோவைநகரிலேநிகழும்போது அவற்றிற்குத் தமது பிரதிநிதியாகச் சமூகமளிக்குமாறு பரிசுத்தபாப்பாசர் லிஸ்பன்நகரின் கருதினுல்பத்திரியாக்குவான டொன் மனுவேல் கொன்சால்வெஸ் செறெஜேய்ரு ஆண்டவரை நியமனஞ் செய்திருக்[illegible]தி கிடைத்திருக்கிறது.

## இஸ்பிரீ. ஆகமனத்தின் பின் 11-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மாற். 7: 31—37)

அக்காலத்தில் யேசுநாதர் மறுபடியும் தீரின் எல்லைகளைவிட்டுப் புறப்பட்டு, சீதோன் வழியாகத் தெக்கப்போலிஎன்னும் நாட்டின் எல்லைகளின் நடுவே கலிலேயாவின் கடலருகே வந்தார். அப்போது ஊமையனும் செவிடனுமான ஒருவனை அவர்சமுகத்தில் கூட்டிவந்து அவர் தமதுகரத்தை அவன்மேல் வைக்கும்படி மன்ருடினர்கள். அவரோ சனக்கூட்டத்தினின்று அவனைத் தனியே அழைத்துக்கொண்டு போய், அவனுடைய செவிகளுக்குள் தம்முடையவிரல்களைவைத்தார்; உமிழ்ந்து அவனுடைய நாவைத்தொட்டார்; வானத்தை அண்ணாந்துபார்த்துப் பெருமூச்செறிந்து எப்பேத்தா என்று அவனுக்குச்சொன்னர்; அதற்குத் திறக்கப்படுஎன்று அர்த்தமாம். அக்ஷணமே அவனுடைய செவிகளும் திறக்கப்பட்டு, அவன் நாவின்கட்டும் அவிழ்க்கப்படவே அவன் செவ்வையாய்ப்பேசினன். மேலும் எவனுக்கும் அதைச்சொல்லாதபடி அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆயினும் அவர் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாக அவர்கள் அதைப் பிரசித்தப்படுத்தி, இவர் எல்லாவற்றையும் நன்ருய்ச்செய்தார். செவிடரைக் கேட்கவும், ஊமைகளைப்பேசவும் செய்தருளினரென்றுசொல்லி மேன்மேலும் அதிசயப்பட்டார்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சுதேச வர்த்தமானம்

### சாராயவிலை குறையாது

சாராயவிலை குறையப்போவதாய் ஊரிலே கதைபரந்தபோதிலும் இன்னுஞ் சிலகாலத்துக்குச் சாராயத்தின் விலையைக் குறைப்பதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்குக் காரணம் (1) பெருந்தொகையாகச் சனங்களுக்குக் கொடுபடப்போதியசாராயம் இருப்பிலே இன்னும் சேர்த்துவைக்கப்படாதிருப்பதும், (2) அதிகநாட்படவைத்துப் பக்குவப்படுத்திய சாராயத்தையே விற்பனைக்குக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதுமேயாம். இந்தஇரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்ட பின்னரே சாராயத்தின் விலைகள் குறைக்கப்படவிருக்கின்றன.

### மன்னூரும் நெல்விலையும்

மன்னூர்ப்பிரிவிலே தேவைக்குமேற்பட நெல்விளைவிக்கப்பட்டபோதிலும் தற்போது அங்கே நெல்ஒருபுசல் 13 ரூபாவாகவும், அரிசி ஒருபடி 1 ரூபாவாகவும் விலைப்படுகின்றன. நெல்லின் விலை இவ்வளவாக முன்னெருபோதுமே ஏற்றமடையவில்லையாம். ஊர் அரிசியின்விலை அதிகரித்துக்கொண்டு வருவதாலே அரிசிப் பாவனையாளர் கூப்பனுக்குக் கொடுபடும்அரிசி கேவலமாயிருப்பதாக முறையிடுசெய்கின்றனர். மன்னூரிலிருந்து ஊர்நெல்லைப் [illegible]ற்றியனுப்புவ[illegible]செய்த அரிசியைக் கொழும்பிலிருந்து மன்னூருக்கு அனுப்பிவைப்பதாலும் அரசாங்கம்பணத்தை வீணுகச் செலவிடுகிறதென்றும், மன்னூரிலே மில்லில் நெல்குற்றப்பட்டால் அந்தஅரிசியையே கூப்பனுக்குக் கொடுக்கலாமென்றும் அவர்கள் கூறுகின்ருர்கள்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

என்மீது பொய்யாகத் தொடரப்பட்ட வழக்கு பரிசுத்தபாத்திமாமாதாவினதும் அர்ச். அந்தோனியாரினதும் சலிகையால் தள்ளுப்பட்டது. நேர்த்திப்பிரகாரம் இதனைப்பிரசுரஞ்செய்கிறேன்.

பேதுரு அல்போன்ஸ்
பாஷையூர்

## கம்யூனிஸமும் கிறீஸ்தவமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. கம்யூனிஸம் தனது நாஸ்திகக்கொள்கையைப் பலாத்கார முறையில் பரப்பக் கங்கணம் கட்டியுள்ளது. இதன் விளைவாக மனிதத்தன்மையையே மனிதர் இழந்துவிடுகின்றனர். உலகம் சேறுஞ்சகதியுமான ஒருபாதாளத்திற்குள் இழுத்துச்செல்லப்படுகின்றது. கம்யூனிஸம் சமாதானத்தினதும், சுதந்திரத்தினதும் வேஷத்தைத் தரித்திருந்தபோதிலும், அதன் சுயரூபத்தை நாம்அறிவோம்.

(தொடரும்)

புத்தகமதிப்புரை

## மரியன்னையின் புகழ்மாலை

அல்லது

### தேவமாதாவின் பிரார்த்தனை

ஆக்கியோர்: மரியன்னையின் தமிழ்க் கழகம்; பாப்பரசர் குருமடம், கண்டி. அச்சிட்டு வெளியிட்டோர்: அஸிஸி அச்சகம், நாகர்கோவில். 330 பக்கம் கொண்டது. பிரதிவிலை தபாற்செலவு உட்பட 2 ரூபா 50 சதம். பின்வரும் முகவரிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்: வண. பி. ஆரோக்கியசாமி, பாப்பரசர் குருமடம், கண்டி.

கண்டியிலுள்ள பாப்பரசர் குருமடத்துத் தமிழ்ச்சாகிய பிறதர்மார்களது "மரியன்னையின் தமிழ்க் கழக"ப் பொன்யூபிலி விழாவின் நிரந்தரமான ஓர் ஞாபகசின்னமாக இந்த "மரியன்னையின் புகழ்மாலை" அழகாகப் புனையப்பெற்று அத்திருநாயகியின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கப்பெற்றுள்ளது. நாம்தேவமாதாவின் பிரார்த்தனையைச் சொல்லும்போது, "அர்ச். மரியாயே" என்பது முதல் "சமாதானத்தின் இராக்கினியே" என்பதுவரையில் ஐம்பத்துமூன்றுவிதமாக மாதாவின் புகழ்ச்சிகளை — அதாவது மாதாவுக்கு 53 வகையான மகிமைப் பட்டங்களைச்சேர்த்துக் கோர்த்து ஓர் சுகந்தபூச்செண்டை அவர்பாதத்தில் சூட்டுகின்ரேம். சுருங்கக்கூறுமிடத்து, பரலோகஅன்னையின் மகிமையையும், அவரது புண்ணியங்களின் பெருமையையும் புகழ்ந்து நாம் கூறக்கூடியதெல்லாம் இந்தப் பிரார்த்தனையில் அடங்கியிருக்கின்றது. இந்தஉந்நதமான செபத்தின் கருத்துகளை யாவரும் தெளிவாகக் கண்டுணர இப்புத்தகம் பேருதவியாகும். திருக்குடும்பத்தின் நசரேத்துஊர்ப் பரிசுத்தஇல்லத்தைக் கொண்டிலங்கும் லொறெற்ரேஎன்னும் திருத்தலத்தில் இந்தப் பிரார்த்தனை முதன்முதலாகச் சொல்ல ஆரம்பிக்கப்பட்டவாலாற்றையும், ஒவ்வோர்மன்ருட்டின் உயரியஅர்த்தத்தையும், பரிசுத்தமரியன்னையின் புகழ்ச்சிகளையும் இன்பமான, தெளிவான, சுத்தமான தமிழ்நடையில் பக்திரசம் ததும்ப எழுதித்தந்துள்ள கண்டிக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடத்தமிழ்மாணவர்களின் பெருமுயற்சியையும், தமிழ்வசனநடையில் அவர்கள் அடைந்துள்ள அருந்தேர்ச்சியையும் நாம் புகழ்ந்து பாராட்டுகின்றோம். மரியன்னையின் இப்புகழ்மாலைக்குக் கும்பகோண மேற்றிராணியாரான மகாவந். பீற்றர் பிரான்சீஸ்ஆண்டவர் சிறப்பாக அளித்துள்ள நூன்முகத்திலே, "இதனது தேனையொத்த இன்பமொழிகளும், மடைதிறந்தோடும் வெள்ளம்போல் தட்டுத்தடையின்றிச் செல்லும்வசனங்களும் செவிக்குஇன்பத்தையும், மனதுக்குப் பக்திஉருக்கத்தையும் கொடுக்கின்றன" என்று வரைந்திருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இப்புத்தகம் கத்தோலிக்கமக்களுக்கு—மாதாவின் பக்தர்களுக்கு ஓர் கருந்தனம் போன்றது. அதனால் அவர்கள் ஒவ்வொருவரும் இதனை வாங்கிப்படித்து, மாதாவுக்குச்செய்யும் வேண்டுதல்களின் அர்த்தத்தைச் சரிவரக்கண்டுபிடித்து நன்மையடைய வேண்டுமென்பதே நமது பேராசையாகும்.

புத்தக மதிப்புரை

## "உண்டுவாழ்வோம்"

தமிழாக்கஞ்செய்தவர்: வண. ஜே. எம். நீக்கொலாஸ் சுவாமிகள். அச்சகம்: அசிஸி, நாகர்கோவில். 29 பக்கங்கள் கொண்டது. பிரதிவிலை சதம் 10. பதினைந்துசத இலங்கைத்தபால்முத்திரை அனுப்பினால் ஒருபிரதி அனுப்பப்படும். கிடைக்குமிடங்கள்: (1) அசிஸி அச்சகம், நாகர்கோவில், தென்னிந்தியா. (2) தமிழ்இலக்கியக் கழகம் 52, புதுக்கிராமம், தூத்துக்குடி. (3) வண. ஜே. எம். நீக்கொலாஸ் சுவாமிகள், மேற்றிராணியார்இல்லம், தூத்துக்குடி.

"உண்டுவாழ்வோம்" என்ற இப் புத்தகத்தின் தலையங்கத்தைக் கவனித்ததும் எதைஉண்போம்? எதைக் குடிப்போம்? என்ற சுவிசேஷமொழிகள் நம்முடைய உள்ளத்தில் எழுவது ஆச்சரியமன்று. உண்பதும், குடிப்பதும்என்ற உலகப்போக்குடைய மக்களுக்கு அப்பம்ஆதியாம் போசனபானங்களின் எண்ணமே உடன்வந்து கொள்ளும். ஆனால், ஞானப்போக்குடைய மக்களுக்கோ அதுபரலோகத்திலிருந்து இறங்கிவந்த சீவியந்தரும் அப்பமாகிய திவ்வியநற்கருணையை உண்டுவாழ்வோம் என்பதையே ஊன்றிநோக்கச்செய்யும். ஆதித் திருச்சபையிலிருந்த ஒரு நல்லவழக்கத்தை—அதாவது அடிக்கடியும், கூடுமானால் தினமுமே திவ்வியநன்மை உட்கொள்ளும் சுகிர்தவழக்கத்தை விசுவாசிகளிடையே திரும்பவும் ஏற்படுத்தி முத். பத்தாம்பத்திநாத பாப்பானவர் 1905-ம் ஆண்டு மார்கழி 17-ந் திகதியன்று பிறப்பித்தஉத்தரவை இது தெளிவாகவிளக்குகின்றது. சுத்தகருத்துடன் திவ்வியநன்மை வாங்குவதென்றால் என்ன? அதை வாங்கும்போது இருக்கத்தகாதது என்ன? செய்யவேண்டிய உறுதியான தீர்மானம்என்ன? நன்மைவாங்குமுன் செய்தத்தகும் ஆயத்தம்என்ன? வாங்கியபின் செய்யவேண்டியது என்ன? நன்மைவாங்குமுன்செய்யத்தகும் ஆறு பத்திமுயற்சிகளும்எவை? வ, ந, கி, வி, கா எனும் எழுத்துக்களாலே குறிக்கப்படும் ஐந்துபத்தி முயற்சிகளும்எவை? இவைகளையெல்லாம் நன்குஅறிந்து அவற்றின்படி நடக்கிறவர்கள் திவ்விய நன்மையை உண்டுவாழ்வோர் ஆவார்கள். பிள்ளைகளும் இலகுவில் விளங்கக்கூடிய இனியபாஷையிலே கவர்ச்சிகரமாக எழுதப்பட்டுள்ள இந்தநூல் ஓர் திவ்வியநன்மைப் பொக்கிஷமென்றே உரைக்கலாம். குறைந்தவிலையிலே கிடைக்கக்கூடிய இப்புத்தகத்தைக் கத்தோலிக்க தமிழ்மக்கள் வாங்கிப்பிரயோகிப்பதால் உண்டுவாழ்வே. நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

யாழ்ப்பாணம்

# அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

கடற்கரைத் தெருவிற் கணித்தாய்க் கட்டப்பட்டுள்ள புதுக் கோவிலில் திருச்சுரூபம் கொண்டெழுந்தருளிப் பலவகையான நோய்களாற் பீடிக்கப்பட்டோருக்கெல்லாம் பெரும்சகாயங்களைப் புரிந்துவரும் அற்புதவரத்தர் ஆராதிஷ்ட ஆரோக்கியநாதரின் வருடாந்த திருநாட் கொண்டாட்டங்கள் இம்மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27-ந் திகதி புதன்கிழமை பெரியபாடற்பூசையுடனும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவாகும்.

கவனிப்பு:— காணிக்கை மெழுகுவர்த்திகள் கோவிற்பொறுப்பில் விற்கப்படுவதால், எவரும் கோவிலுக்கருகாமையில் மெழுகுதிரிவிற்க உத்தரவில்லை.

P. T. ஜேம்ஸ், O. M. I.
கட்டளைக்குரவர்

நல்லூர் மீசாம்



முகமாலை
## அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

ஆவணிமாதம் 15-ந் திகதி ஆரம்பம.

ஆவணிமாதம் 23-ந் திகதி மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம்.

ஆவணிமாதம் 24-ந் திகதி காலை 7 மணிக்குத் திருநாட்பூசை. பின்னர் சுற்றுப்பிரகாரம்.

Sub-Post Office,
Nallur.

Rev. Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, Jaffna.

புத்தக மதிப்புரை

## 'தமிழ் சிங்கள சமசொற்கள்'

முதலாம் பாகம்

ஆசிரியர்: புத்தகுரு குணரத்ன அவர்கள், ஸ்கந்தவரோதய கல்லூரி ஆசிரியர். பிரசுரித்தவர்: எஸ். ரி. சின்னத்துரை. அச்சகம்: நியூலீலா பிறெஸ், கொழும்பு, 48 பக்கங்கள் கொண்டது. பிரதிவிலை ரூபா 1. கிடைக்குமிடம்: லீலாஸ்ரோர்ஸ், 249, கொறிஸ்ரேட், கொழும்பு - 11

இலங்கை இப்பொழுது சுதந்தர நாடாகி விட்டது. அதனால் இதன் தேசியபாஷைகளாகிய தமிழும், சிங்களமும் அரசகருமமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுப் படிப்படியாக நடைமுறையில் இடம்பெற்று வருகின்றன. சிலவருடங்களுள் இவைகளே அரசகருமமொழிகளாகிவிடும். எனவே, இலங்கையின் ஐக்கியத்துக்காகவும், முன்னேற்றத்துக்காகவும், அரசாங்க அலுவல்கள் இலகுவாக நடைபெறுவதற்காகவும் தமிழர் சிங்களத்தையும், சிங்களவர் தமிழையும் கற்க வேண்டியது அவசியமாகும்.

தமிழ் தமிழ்ச்சாகியத்தினதும், சிங்களம் சிங்களசாகியத்தினதும் பாஷைகளாக இருந்தாலும் இருபாஷைகளுக்கும் பலவழிகளாலும் தொடர்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே இலங்கையில் தமிழரும் சிங்களவரும் அரசாட்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒருவர் நாட்டை மற்றவர் மாறிமாறிப்பிடித்து ஆண்டகாரணமாக ஒருவரது பாஷைச் சொற்கள் மற்றவர் பாஷையில் கலந்து வழங்கிவரலாயின. இன்னும் தமிழ்ப் பாஷையில் வடமொழியிலுள்ள அநேக சொற்கள் தற்பவமாகவும், தற்சமமாகவும் வந்துவழங்குவனபோல சிங்கள பாஷையிலும் வடமொழியிலிருந்து அநேக சொற்கள் கலந்துவழங்கிவருகின்றன. மேலும் பிறசாதியார் இலங்கையையாண்டதால் அவர்கள் பாஷைகளிலிருந்தும், வேறு திசைச்சொற்களாகவும் அநேகசொற்கள் தமிழிலும், சிங்களத்திலும் கலந்திருக்கின்றன. இவைகாரணமாகத்தமிழிலும்சிங்களத்திலும் பொதுவாக வழங்கிவரும் ஆயிரக்கணக்கான சமசொற்கள் இப்பொழுதுவழக்கில் இருந்துவருகின்றன.

இந்நூலாசிரியர் இருபாஷைகளையும் நன்குஆராய்ந்து, சமசொற்களைத்தேடி எடுத்து, அவற்றைத் தொகுத்து, வகுத்து இந்நூலில் தந்திருக்கிறார். இந்நூலில் தமிழ், சிங்கள சமஎழுத்துக்களையும், சமசொற்களையும் அவற்றின் தமிழ், சிங்களஉச்சரிப்புகளையும் கொடுத்திருப்பதால் தமிழர் சிங்களத்தையும், சிங்களவர் தமிழையும் ஆசிரியர் உதவியின்றி இலகுவாகக் கற்றுக்கொள்ள உதவியாக இருக்கின்றது. தமிழிலில்லாத சிங்களஎழுத்துக்களையும் கொடுத்து உச்சரிப்புவிதிகளும் எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. இந்நூலாசிரியரினதும், இவர்போன்றோரினதும் அரியசேவைகளால் தமிழர் சிங்களத்தையும், சிங்களவர் தமிழையும்கற்று இருசாதியினரும் ஐக்கியப்பட்டு வகுப்புவாத கூச்சலின்றி வாழுங்காலம் தீவிரமாகவந்தெய்த வேண்டுமென்பதே நமது குன்றாதஆவலாகும். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

நமது அச்சியந்திரசாலைப் புத்தகசாலையில்
## விற்பனைக்கிருக்கும் கத்தோலிக்க புத்தகங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| சின்னக்குறிப்பிடம் ... | 15 |
| பெரியகுறிப்பிடம் ... | 30 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 25 |
| உறுதிப்பூசுதற்குறிப்பிடம் ... | 05 |
| ஞானோபதேசபாடத்திட்டம் ... | 90 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரணசெபங்கள் ... | 2-00 |
| திவ்வியபூசையின் சாதாரணசெபங்கள் ... | 60 |
| மோட்சபாதை (கலிக்கோ) ... | 5-00 |
| " " (தோல்) ... | 7-50 |
| முத்தித் திறவுகோல் (தோல்)... | 3-50 |
| ,, ,, (கலிக்கோ) ... | 2-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| திவ்வியபூசைப்பலியின் பேரில் தியானங்கள் ... | 1-00 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிஷேங்களின் ஒப்புமை ... | 2-95 |
| பசாம் ... ... | 1-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| சத்தியவேத ஞானக்கீர்த்தனங்கள் ... | 75 |
| லத்தீன் (1-ம் பகுதி கோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் 2-ம்பகுதிகோட்டுகளுடன் (அச்சில்) | |
| நவதின உற்சவம் ... | 75 |
| சற்பிரசாத அன்பன் ... | 30 |
| தருமஅப்பம் ... | 1-00 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| மருதமடு யாத்திரைக் கைத்துணை ... | 50 |
| பத்திமாமாதாவும் செபமாலையும் ... | 25 |
| அவர்கள் மூன்றுசிறுவர்கள் (பத்திமா) ... | 2-50 |
| மகாமனந்திரும்புதல் இயக்கப்பிரசங்கங்கள் ... | 1-00 |
| ஞானவொடுக்க பிரசங்கங்கள் (அச்சில்) ... | |
| திவ்வியபூசைமகத்துவம் ... | 2-50 |
| பூசைஉதவி மந்திரம் | 40 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| (Part II) ... | 90 |
| (Part III) (அச்சில்) ... | |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி ... | 70 |
| பத்திச்சபைகள் ... | 20 |
| ஆத்துமதரிசனம் ... | 20 |
| சத்தியவேத தர்ப்பணம் (Part I) போதக காண்டம் ... | 2-50 |
| மன்னார் வேதசாட்சிகள் ... | 1-00 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக்கன்னிகைசரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ் ஞோன் சீவியசரித்திரம் ... | 40 |
| நானே குற்றவாளி ... | 1-00 |
| வேதாகம வாசிப்பு ... | 90 |

விலாசம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது

செல்வச் சகோதரங்களே!

நாளை எங்கள் பரலோக தாயாரின் ஆரோபண தினம். அதாவது எங்கள் தேவஅன்னை ஆத்தும, சரீரத்தோடு மோட்சத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தினம்.

இது எங்களுக்கு ஓர் சந்தோஷம் நிறைந்த தினம். ஏனெனில், எங்கள் தாயார் மோட்ச மகிமை அடைந் திருக்கிறார். பிதா, சுதன், இஸ்பிரீத்து ஆகிய மூன்று தேவ ஆட்களும் கன்னி மரியாயைப் பரலோக, பூலோக அரசியாய் முடி சூட்டியிருக்கிறார்கள். தேவமாதா மோட்ச அலங்காரி. பரம இராக்கினி.

எங்கள் தாய் மோட்சத்தில் இருக்கிற படியால், எங்களுக்கு நன்மை கிடைக்கும் என்பது நம்பிக்கை. எங்களைக் கண்ணுங் கருத்துமாய்ப் பேணிக் கரிசனையாய் மன்றாடி, ஏராளமான இக பர நன்மைகளைப் பெற்றுத் தருவார்.

ஆகையால் பரலோக பாதையில், பரிசுத்த தனத்தில் பக்திப் பரவசமாய் நடந்து செல்லும் வரம் கிடைக்க வேண்டுங்கள்.

நிற்க, எமது நல்ல ஆயரான மேற்றிராணி ஆண்டவர் தமது பெருநாள் அன்று தமது மேற்றிராசனக் கோவிலிலே திவ்விய பூசை செய்து, அதிலே இரண்டு கைகளும் இல்லாத திரு இருதய ஆண்டவரின் சுரூபம் ஒன்றைப் பற்றிச் சொன்ன கதையை உங்களில் இருவர் எழுதி அனுப்பினார்கள். அவைகளைப் படித்து மிகவும் சந்தோஷப் பட்டேன். நீங்களும் அதைப் படித்து ஆனந்தம் கொள்வீர்கள் என நினைத்துக் கீழே தருகின்றேன்.

உங்கள் அன்புள்ள
அண்ணு

## உண்மை

"உண்மை உயர்வளிக்கும்."
"உண்மைக்கு அழிவில்லை."
"உண்மை வெற்றிதரும்."
"உண்மை ஞானத்தின் உறைவிடம்."
"உண்மை ஓர் பெரிய தீவர்த்தி."
"உண்மைக்குச் சாட்சி தேவையில்லை."
"உண்மையின் முகம் அழகும், கம்பீரமும்உள்ளது."
"உண்மை தெய்வீகம் பொருந்தியது."
"உண்மை அழியாவிஷயங்களின் அன்னை."
"உண்மைபேசும்உதடுகளே விலைஉயர்ந்தபவளங்கள்."
"உண்மையே பேசு."

## சிறுவனும் புஷ்பமும்

சிறுவன் :— பூவே! பூவே! நறுமணத்தால்
பொங்கும் இன்பந் தரும்பூவே!
நானும் உன்போல் வாசனையை
நாட்டிற் பரப்பும் வழியேது?

புஷ்பம் :— பாலா! பாலா! பாலகனே!
பாவந் தன்னை வெறுத்துவிடு
சூதில் லாத குழந்தையிடம்
சுகந்தம் வீசும் அறிவாயே.

சிறுவன் :— பூவே! பூவே! உன்னழகைப்
போற்று கின்றார் எல்லோரும்
நானும் உன்போல் அழகுபெற
நல்ல வழிதான் கூருயோ?

புஷ்பம் :— குழந்தாய்! குழந்தாய்! உன்மனதில்
குற்ற மின்றி இருந்திட்டால்
நிறைந்த அழகு என்னைப்போல்
நீயும் பெறுவாய் நிச்சயமே.

"ஜெயம்"

## சிந்திக்கத் தக்கவை

தானியத்தைக் காற்றில் தூற்றும்போது சப்பி, சாவி எல்லாம் காற்றோடு பறப்பது போல, வேத கலாபனைகளும், மத பேதங்களும் வந்த காலங்களில் சப்பி சாவிக்குச் சமானமாய் இருந்த அநேக போலிக் கிறீஸ்தவர்கள் சத்திய வேதத்தை விட்டுப் பறந்து விட்டார்கள்.

* * *

அறுகம் புல்லில் இலைக்கு ஒரு வேர். அதை எத்தனையாக அறுத்து ஊன்றினுலும், ஒவ்வொரு துண்டும் முளைத்து வேர் ஊன்றி வளரும். அது போல ஆண்டவருடைய வேதத்தைச் சத்துராதிகள் எப்படித்தான் சின்னபின்னமாய் ஊர் தேசம் எங்கும் சிதற அடித்தாலும், அது எப்போதும் வேர் ஊன்றி வளருமே அல்லாமல் ஒருபோதும் அழிந்து போகாது.

* * *

அரிய சகோதரமே, யேசுநாதர் ஞான ஸ்நானத்தினல் உன்னைத் தமது பிள்ளையாக்கி, அலைவாய்ப்பட்டும் அழிவாய்ப் படாத தமது திருச்சபையில் சேர்த்து, உனக்கு மோட்ச உரிமையும் தந்திருக்கிருர் அல்லவா? இந்த நன்மைகளை எல்லாம் சாவகாசமாய் ஊன்றி யோசித்து ஆண்டவருக்கு நன்றி சொல்லி இருக்கிருயா? உன் நன்றியின் அடையாளமாய்ப் பிறசமயத்தவர்களுக்கும் இந்தப் பாக்கியங்கள் கிடைக்கும்படி எப்போதும் மன்றாடி வருவதோடு அதற்காக உன்னுல் இயன்ற பிரயாசம் எல்லாம் படு. அவர்களுக்கு நன்முன் மாதிரிகையாய் நட.

— I —

## நாங்களே ஆண்டவரின் கைகள்

பட்சமுள்ள அண்ணு!

நீங்கள் எங்களுக்கு எழுதிய செய்தியை எங்கள் ஆசிரியர் இன்றுதான் வாசித்துக் காட்டினர். அதில் நீங்கள் கேட்டிருந்தபடி எங்கள் நல்ல ஆயர் தமது பெருநாளில் செய்த பிரசங்கத்தில் சொன்ன கதையை எழுதி அனுப்புகிறேன். தயவுசெய்து அதை வாசித்துவிட்டு நல்ல ஒரு வெகுமதி அனுப்பி வைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள தம்பி
ஞா. ஸ்ரனிஸ்லாஸ்
சென். சாள்ஸ்பாடசாலை

இரண்டாம் உலக யுத்தம் நடந்து முடிந்தது. அதனுல்எவ்வளவோ அழிவுகள் ஏற்பட்டன. அநேக நகரங்கள் நாசமாய் விட்டன. அவற்றுள் ஒன்றை அமெரிக்க அரசாங்கம் திரும்பக் கட்டத் தொடங்கியது. இந்த வேலை ஒரு சேனுதிபதியின் மேற்பார்வையில் நடந்து வந்தது. ஆங்காங்கே இடிந்த வீடுகள் கும்பம் கும்பமாகக் கிடந்தன. அவற்றை வெட்டி எடுத்து அப்புறப் படுத்தினார்கள். ஓர் இடத்தில் வெட்டும் பொழுது தூளாக உடைந்து போன ஒரு சுரூபத்தின் பகுதிகள் காணப் பட்டன. அதைக் கண்டார் அந்தச் சேனுதிபதி. அவர் ஒரு சிறந்த சிற்பி. அவர் துண்டுகளை எல்லாம் பொறுக்கி எடுத்துச் சேர்த்தார். அவர் அவற்றைப் பொருத்தி ஒட்டியபோது ஒரு அழகான திருஇருதய ஆண்டவர் சுரூபமாக அமைந்தது. அவர் அவ்விடத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கோவிலில் ஒரு அழகான பீடத்தில் அதை எழுந்தருளச் செய்தார். ஆனுல், அந்தத் திருஇருதய ஆண்டவர் சுருபத்துக்கு இரண்டு கைகளும் காணப் படவில்லை. அவைகளை அவர் எவ்வளவோ தேடியும் கிடைக்கவில்லை. அந்தப் பத்தியும் புத்தியுமுள்ள சேனுதிபதி கைகளைச் செய்து வைத்திருக்கலாம். அவர் அப்படிச் செய்ய வில்லை. அவர் அந்தச் சுரூபத்தின் பாதத்தில் **"நாங்களே ஆண்டவரின் கைகள்"** என்று எழுதி வைத்தார்.

திவ்விய இரட்சகர் எம்மை இரட்சிக்க வந்தார். கடைசித் துளிஇரத்தம் வரையும் சிந்திப் பாடுபட்டார். அவரது ஒருதுளி இரத்தம் உலகம் முழுவதையும் இரட்சிக்கப் போதும் என்றுலும் அவரது இரட்சணிய வேலை அத்தோடு முடிவடைய வில்லை. குறைவாகவே இருக்கிறது. நாங்களே அதைச் செய்து பூர்த்தியாக்க வேண்டும். திருச்சபையாகிய சரீரத்தின் அவயவங்கள் நாங்கள். அதனுல் நாம் ஒருவர் ஒருவருக்காக மன்றாட வேண்டும். ஒருவர் ஒருவருக்கு உதவிசெய்யவேண்டும். நமக்கு வரும் கஷ்ட துன்பங்களை நல்ல மனதோடு ஒப்புக் கொடுக்க வேண்டும். ஒறுத்தல் தியாகங்களைச் செய்ய வேண்டும். எமது சகோதரர்களது இரட்சணியத்துக்காக எங்களால் செய்யக் கூடியதை எல்லாம் செய்து நாம் திவ்விய இரட்சகரின் இருகைகளாக இருந்து அவரின் இரட்சணிய வேலையைப் பூர்த்தியாக்க வேண்டும்.

நாங்களே ஆண்டவரின் கைகள்.

— II —

## யேசுவின் கரங்கள்

இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்தபோது ஜேர்மனியில் உள்ள ஆலயங்கள், மனைகள், கட்டடங்கள் அநேகம் பகைவரால் தாக்கப்பட்டு, இடித்து அழிக்கப்பட்டன. ஆலயங்களில் இருந்த தேவ ஆராதனைப் பொருட்களும், சுரூபங்களும் மண்ணுக்கு இரையாயின. யுத்தம் முடிந்தபின் தகர்க்கப் பட்டுப் பாழடைந்து கிடந்த கட்டடங்கள் புதுப்பிக்கப் படலாயின. அப்படியே இடிந்து கிடந்த ஆலயங்களில் ஒன்றைக் கட்டி எழுப்பப் பக்தியுள்ள அமெரிக்க சேனுபதியான சிற்பி ஒருவர் அமர்த்தப்பட்டார். இடிந்து தகர்ந்த இடங்களை ஒப்பரவு செய்யும்போது, தூள் தூளாய் நொறுங்கி யிருந்த சுரூபம் ஒன்றைக் கண்டு, அந்தத் தூள்களில் ஒன்றையும் விடாது கவனமாகப் பொறுக்கி எடுத்தார் அந்த வீரச் சிற்பி. பின்னர் சிற்பத் திறமை மிக்க அவ்வீரர் மிகுந்த பிரயாசையுடன் வெகு நுட்பமாக அவைகள் யாவையும் பொருத்தினுர். அது ஓர் அழகிய திரு இருதயநாதரின் சுரூபமாகி விட்டது. அப்போது அந்தப் பக்தியுள்ள வீரச் சிற்பிக்கு உண்டான ஆனந்தத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? ஆனுல், அவரின் ஆனந்தத்தை மட்டுப் படுத்த அந்தச் சுரூபத்தில் ஒரு குறை காணப்பட்டது. பொருத்தப் பட்ட அந்தச் சுரூபத்துக்குக் கைகள் இல்லை. ஆலய வேலை முடிந்ததும் சுரூபம் வெகு ஆடம்பரமாகப் புதிய கோவிலில் ஸ்தாபிக்கப் பட்டது. சனங்கள் எல்லாரும் ஆனந்தங் கொண்டனர். சிற்பியின் தொழில் நுட்பத்தை வியந்தனர். ஆனுல், "இந்த அழகிய சுரூபத்துக்குக் கைகள் இல்லையே" என்று சிற்பியிடம் கூறினர். இதைக் கேட்ட சிற்பி அவர்களை நோக்கி, "நீங்கள்தான் அதன் கைகள்" என்று கூறினுர். அத்துடன் திருஇருதய சுரூபத்தின் பாதத்திலும் பெரிய எழுத்துகளால் "நீங்களே யேசுவின் கைகள்" எனவும் எழுதி விட்டார்.

இக்கதையை வாசிக்கும் சிறியோரே! பெரியோரே! நீங்கள் ஒவ்வொருவரும் யேசுவின் கைகள் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். நமது சரீரத்துக்குக் கைகள் எவ்வளவு உபயோகமோ, அப்படியே திருச்சபைக்கும் யேசுவின் கைகளாகிய நாங்கள் உபயோகமுள்ளவர்கள். ஆகவே, யேசுவின் கைகளாகிய நாங்கள் எங்கள் செப தபம், துன்ப துரிதங்களால் ஆத்துமாக்களை இரட்சிக்கும் வேலையை ஊக்கமாய்ச் செய்து வருவோமாக.

7-ம் வகுப்பு மாணவி
கிறேஸ் லீலா அந்தோனிப்பிள்ளை
யா. தி. கன்னியர்மடம்

## நேர்த்தியின் பூர்த்தி

தயாளம்நிறைந்த யேசுவின் திருஇருதயத்தின் அனுக்கிரகத்தாலும், பரிசுத்த யாத்திமாதாயகி, அர்ச். சூசையப்பர், அர்ச். சவேரியார், அர்ச். அந்தோனியார் மற்றும்பல அர்ச்சியசிஷ்டர்களின் வேண்டுதலாலும் எனது பரீட்சையிற் சித்திபெற்றேன். இவர்களின் நாமம் புகழப்படக்கடவதாக.

M. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் சொன்னது உண்மையே

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுள். சிற்பி அதை முத்திசெய்யும்படியே நீட்டினுள். அவர் அதை முத்தமிடும்படி குனிய அவசியமில்லை. அவ்வளவு உயரத் தூக்கிக்காண்பித்தாள். சிற்பியோ தனதுவீட்டு வேலைக்காரனின் கரத்தை எத்துணைகவனமின்றித் தொடுவாரோ அதேபோல் தொட்டு முத்தமிட்டார். அரசி அதிசயித்தாள். எனினும் தன்உள்ளத்தை வெளிக்காட்டவில்லை. சிற்பி அவ்வளவு பிடித்தமானவராய் இல்லை. எனினும் அவர் மேல் அவளுக்குமதிப்பு அதிகம்.

அரசி அறையைச் சுற்றிநோக்கிய பின்னர் சிற்பியைப்பின்தொடர்ந்தாள். தொழிற்சாலையின் பின்புறமாயிருந்த ஓர் அறையில் இருசன்னல்களுக்கு மத்தியிலுள்ள மேடைமீது துணியால் மூடப்பட்ட ஒருசுரூபம் இருந்தது. சிற்பி பயபக்தியுடன் திரையைவிலக்கினுர். சுரூபத்தைப்பார்த்ததும் அரசி பயந்துதிடுக்கிட்டவள்போல் கரத்தைத் தன்மார்பில் வைத்தாள். கரத்திலே செங்கோல்ஏந்திய சற்றேசாய்ந்த சிரசின்மீது கிரீடம்தாங்கிநின்ற தேவஅன்னை உண்மையாகவே ஓர்அரசியைப்போல் இந்தஅரசிக்குமுன் நின்ருள்.

ஹெமனேவ் வம்சத்தினளான அரசி நமதுவிண்ணரசிக்குமுன் தான் ஒன்றுமில்லாதவள்என்பதை உணர்ந்தாள். சிறு மாநாற்காலிஒன்றில் அமர்ந்து சுரூபத்தை நன்குகவனித்தாள். பரலோகஅரசியின் உருவத்தைநோக்கியதும் அவள்உள்ளத்தில்இருந்த பெருமை மறைந்தொழிந்தது. அந்தச்சுரூபத்தைப் பார்த்தவர்கள்யாவரும் தங்களை அறியாமலே கரங்களைக்குவிப்பார்கள். அரசியும் அவ்விதமேசெய்தாள். பின்னர் சிற்பியண்டைசென்று, கோவிலில்பேசுவதுபோல் மெதுவாகப்பேசி "இதை விலைக்குக்கொடுக்கவா வைத்திருக்கிறீர்கள்?" என்ருள். ஆம்என அவர் தலையைஅசைத்தார்.

"நான் இதை வாங்கிக்கொள்ளுகிறேன்; பிரபு பணத்தைக்கொடுப்பார்; ஆனுல்..." என அரசிகூறிச் சற்றுத் தயங்கிப் பின்தொடர்ந்துபேசலானுள். "இந்தச்சுரூபத்தில் ஒரு மாற்றம் செய்யவேண்டும்; நான் கத்தோலிக்க சபையைச் சேர்ந்தவளல்ல; பிரிவினைச்சபையினள்; நாங்கள் கன்னிமரியம்மாளுக்கு வெகுசங்கை காண்பிக்கிறேம்; ஆனுல், ரோமான்கத்தோலிக்காகிய உங்களைப்போல் அதிக சங்கை காண்பிப்பதில்லை; ருஷியசபையைச்சேர்ந்த நாங்கள் மரியம்மாளை அரசியாகச்சங்கிப்பதில்லை; அது எங்கள்வழக்கமல்ல; ஆதலின் அந்தக்கிரீடத்தை எடுத்துவிடவேண்டும்; நான் சொல்வது விளங்குகிறதா?"

சிற்பி தலையைஉயர்த்தி நேரே அரசியைநோக்கினுர். "அது முடியாத காரியம்; தேவதாயின்கிரீடம் ஒருபோதும் அகற்றப்படமாட்டாது; கிரீடமில்லாதஅரசி அரசியாகமாட்டாள்; தேவதாய் அரசிகளிலெல்லாம் பெரிய அரசி; அவள்கிரீடம் தரித்திருப்பது நியாயமே; அவள் அதைஅணியாவிட்டால் வேறுயார் அதைஅணியமுடியும்? அவளுடைய தேவமகனே அதைஅவளுக்குக்கொடுத்திருக்கிருர்; அதைநான் அப்புறப்படுத்தமுடியாது; உங்களாலும் முடியாது" எனக் கோபத்துடன்மொழிந்தார்.

"ஐயா, அதைஎடுத்துவிட்டால் பெருந்தொகை சன்மானமாகத்தருவேன்."

சிற்பி தலையைஅசைத்தார். "அதை அகற்றினுல் நான் மோட்சஇராக்கினிக்குத் துரோகம் செய்தவனுவேன்; கிருபைதயாபத்திற்கு மாதாவாயிருக்கிற எங்கள்இராக்கினியே வாழ்க என்னும் செபத்தை எவ்விதம்நான் நேர்மையுடன் சொல்லமுடியும்?"

பின்னர் அரசிசிற்பியைமன்ருடினுள், கெஞ்சிப்பார்த்தாள். இதுவரை ஒரு நாளாவது அவள் இவ்வளவுதூரம் இரந்ததில்லை. சிற்பியோ ஆசையவில்லை. அவள்கடைசியாகத் துயரத்துடன் வெளியேறினுள். சிற்பி வாசல்வரைபோய் அவளை வழிவிட்டு வந்தார்.

மத்தியானம் சிற்பி தமதுபணப்பையைத் திறந்தார். உலர்ந்த ரொட்டித்துண்டு வாங்கமுதலாய்க் காசில்லை. "பரவாயில்லை. மோட்சஇராக்கினிக்குத் துரோகம் செய்வதைவிடப் பட்டினிகிடப்பதுமேல்" என்ருர்.

மூன்றுதினங்கள் கழிந்தன. தேவதாய் மோட்சத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாளுக்குமுந்தின நாள் அன்று. டொகோல் ஜுகோவ் பிரபுவும், பெடோரு அரசியும் திடீரென அங்குகாட்சியளித்தனர். அரசி இருகைகளையும்நீட்டிச் சிற்பியின் கரங்களைப் பற்றினுள். "நீங்கள்சொன்னது உண்மையே. நான் அதைப்பற்றிச் சிந்தித்துப்பார்த்தேன்; தேவதாய் உண்மையாகவே அரசி; இனிமேல் அவள் எனது அரசியாகவுமிருப்பாள்; இப்பொழுது சுரூபத்தைவிலைக்குத் தருவீர்களா?"

உடனே சிற்பி அரசியின்கரத்தை முத்தமிட்டார். "நான் இப்பொழுது விசுவசிக்கிறேன், கிருபைதயாபத்து மந்திரத்தை நானும் இனிமேல் செபிப்பேன்" என மெதுவாகச் சிற்பியின் காதுக்கள் அவள்கூறினுள்.

அடுத்தஆண்டு தேவதாய் பரலோகத்துக்குப்போன திருநாளன்று, மரியா தெல் அனிமா என்ற ஆலயத்தில் பெடோரு அரசி முக்காடிட்டு முழந்தாளிட்டுக் கத்தோலிக்க திருச்சபையின் விசுவாசமந்திரத்தை உச்சாரணம்செய்து கத்தோலிக்க திருச்சபையிற்சேர்ந்தாள், அவளுடைய மக்கள் இருவரும் அவளுடன்சேர்ந்து விசுவாசமந்திரத்தைச் சொன்னுர்கள். அரசியின் வலதுபக்கத்தில் சிற்பி வில்ஹெல்ம் அக்டெர்மான் தமதுசிறந்த உடையுடன் முழந்தாளிட்டிருந்தார். வேறெவருக்கும் இந்தமகிமையைத்தர பெடோரு அந்திரேஜெவ்னு அரசி விரும்பவில்லை.

## சனசமூக நிலையம்

### நாவாந்துறை

நாவாந்துறைவடக்கு, சென்மேரிஸ் சனசமூகநிலையப் பொதுக் கூட்டம் 10-8-52 ஞாயிறுவாரம் காலை 8-30 மணியளவில்நடைபெற்றது. அதிலே பின்வரும் புதுவருட நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

நிலையப்பாதுகாவலர்கள்: வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமிகள், யாழ்ப்பாணமேயர் சாம் ஏ. சபாபதி, காதி. எம். எம். அபூசாலி, எம். எம். சி.

தலைவர்: கே. சூசைப்பிள்ளை, உபதலைவர்: எம். ஆசீர்வாதம்.

காரியதரிசி: என். எஸ்தாக்கி, உபகாரியதரிசி: எஸ் ஞானப்பிரகாசம்.

தனுதிகாரி: என். ஆசீர்வாதம்.

வாசிகசாலைமேற்பார்வையாளர்: ஏ. சந்தியாகு, என். தோபியாஸ்.

கரபந்தாட்டநிர்வாகஸ்தர்கள்: என். இன்னுசிமுத்து, எஸ். அமிர்தநாதர்.

உதைபந்தாட்ட நிர்வாகஸ்தர்கள்: எஸ். தானியேல், எஸ். யோசவ்.

நிலையப்பாதுகாவலர் வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியார் அவர்களின் குருத்துவ வெண்பொன் யூபிலி ஞாபகார்த்தமாகத் தார்சீசியஸ் மஹால்என்னும்பெயருடன் நிலையமண்டபம் கட்டவேண்டுமென்றும், வருடாந்த விழாவும், அத்திவாரக்கல் நாட்டுதலும் விரைவில் நடைபெறவேண்டுமென்றுந் தீர்மானிக்கப்பட்டுக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

காரியதரிசி.

## பாதுகாவலர் திருநாள்

### மாரீசன்கூடல்

மாரீசன்பதிமக்களின் பேரானந்தமிக்கநாள் இப்பதியின்பாதுகாவலரான அர்ச். கயித்தானுமுனீந்திரன் திருநாளேயாகும். இது சென்ற 7-ந் திகதி வழமைபோலச் சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அதற்குமுந்திய நான்குஆயத்ததினஉற்சவங்களும் மாலையாராதனையுடன் முடிவாகிவந்தன. திருநாளன்றுகாலை 7 மணியளவில் பாடகர்குழாம் இனியகீதங்கள் படிக்க, வண. எஸ். பி. அல்பிறெட் சுவாமிகளால் பாடற்பூசை நிறைவேறியது. பூசையின்போது அவர் அர்ச். கயித்தானுமுனீந்திரனை முன்மாதிரிகையாகவைத்து அரியதோர் பிரசங்கம் செய்தனர். பூசைமுடிந்ததும் திருச்சுரூபசுற்றுப்பிரகாரம்நடந்து, சுரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் முடிவெய்தியது. மேலும் முனீந்திரரின்கோவிலிலே குருசுஸ்தாபகவிழாவும் சென்ற 10-ந்திகதி ஆடம்பரமாகநடந்தேறியது. அன்றுகாலை 10 மணியளவில் இப்பதிமக்கள்புடைசூழ, வண. அல்பிறெட் சுவாமிகள் சமூகமாக, வண. ஜே. எவ். சேவியர்சுவாமிகள் திருச்சிலுவையை ஆசீர்வதித்து ஆலயசிகரத்தில் ஸ்தாபித்தனர், இதுகாரணமாக வரவேற்புபசாரங்கள் சந்தோஷகரமாக நடத்தப்பட்டன.

ஏ. சவிரிப்பிள்ளை


நமது அச்சியந்திரசாலைப் புத்தகசாலையில்
விற்பனைக்கிருக்கும்
இந்திய
கத்தோலிக்க புத்தகங்கள்

| | |
|---|---|
| ஞானேபதேசக் கோர்வை முதற் பாகம், இரண்டாம் பாகம், மூன்றும் பாகம் | ... 9-75 |
| சத்தியவேதாகம சங்ஷேபம் (பழைய ஏற்பாடு & புதிய ஏற்பாடு) | ... 1-10 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் | ... 2-25 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | ... 1-50 |
| மன்ரேசா | ... 3-25 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் | ... 1-10 |
| தொன் பொஸ்கோ சரித்திரம் | ... 75 |
| அர்ச்சியசிஷ்டவாரம் | ... 80 |
| சேசு திருச்சரிதை | ... 1-10 |
| சேசுவின்சிறிய புஷ்பம் | ... 1-10 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் | ... 1-10 |
| ஞான சீவியம் | ... 2-50 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா | ... 1-00 |
| அன்னையும் தந்தையும் | ... 40 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவிநவநாள் | ... 35 |
| திரு இருதய நண்பர்களுக்குத் திருமணி | ... 40 |
| ஜெபமாலை நவநாள் | ... 25 |
| புதுமைவள்ளல் புனித அந்தோனியார் | ... 45 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன் | ... 25 |
| அர்ச். சூசையப்பரிடம் போங்கள் | ... 30 |
| அர்ச். சூசையப்பர் | ... 55 |
| ஆயரின் குரலொலி | ... 3-75 |
| புதிய ஏற்பாடு | ... 8-50 |
| இரத்தம்வடிந்த லீலி | ... 75 |

விலாசம்:
மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## GOVERNMENT TENDERS

### Jaffna Kachcheri

N2 272—Sale of the exclusive privilege of selling arrack in the arrack taverns of the Jaffna District for the year 1952/53 will be held at the Jaffna Kachcheri at 10 a. m. on 23-8-52. Tenders should be on the prescribed form which may be obtained at a Kachcheri on production of a tender receipt of Rs. 750/- for each group of taverns.

N2251—Tenders will be received by the G. A., up to 12 noon on 22-8-52 for the supply of cooked meals and refreshments including snacks for one year from 1-10-52 at the Pannai Ferry.

For particulars see Part 1—Section II, Gazette, 8-8-52, copies of which are available for perusal at all Post Offices.

## CEYLON GOVERNMENT RAILWAY

### Level Crossing Repairs

The Level Crossing at 151 Miles 05 Chains 39 Links (Railway Mileage) on the Minneriya Junction—Hingurakgoda Road between Hingurakgoda and Hath-Amuna Railway Stations, will be closed to vehicular traffic as follows for effecting repairs:—

Totally closed from 7-00 a. m. to 4-00 p. m. on Friday 22-8-52.

During the period of total closure traffic will be diverted over a temporary Level Crossing.


## புதிய பாடத்திட்டக் கணிதங்கள்

திரு. வே. சிவக்கொழுந்து அவர்களால் இயற்றப்பெற்ற மேற்படி கணிதநூல்களின் தற்போதைய பதிப்புகள் 2 முதல் 7-ம் வகுப்பு ஈருக உள்ளவையும், உயர் வகுப்புப் பாடகணிதமும் வித்தியாபிரசுரசபையாரால் 30-4-52 இல் அங்கீகரிக்கப்பெற்றுள்ளன. பிரபலபுஸ்தக வியாபாரிகளிடம் பெறலாகும். தேவைகட்கெழுதுக.

வடலங்கா புஸ்தகசாலை
பருத்தித்துறை
Point Pedro


## நேர்த்தியின் பூர்த்தி

கொழும்பு கொச்சிக்கடை வீதியில் கோயில்கொண்டிருக்கும் கோடிஅற்புதராம் அர்ச். அந்தோனியாரின் புதுமையினுலும், கொட்டாஞ்சேனையில் கிருபாசனம் கொண்டிருக்கும் சந்தலூசியம்மாளின் வேண்டுதலினுலும், நற்சகாய (மருதமடு) மாதாவினது அருளினுலும், அர்ச். ஆரோக்கியநாதர், மற்றும் சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்ருட்டினுலும், எனதுமாமாவுக்கு நாலுமாதமாக உண்டாகியிருந்து, பலவைத்தியர்களாற் கண்டுபிடிக்கவியலாது தீராவியாதிஎன்று கைவிடப்பட்ட வருத்தமானது, குணமடைந்ததை முன்னிட்டு நான் நேர்ந்த நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறேன்.

நெடுந்தீவு ம. சேபமாலை

— சமீபத்திலே தமது சிம்மாசனத்தைத்துறந்த எகிப்திய பாரூக்மன்னருக்குச் சொந்தமாய் அந்நாட்டிலே இரண்டுலட்சம் ஏக்கருக்குமேற்பட்ட கமநிலங்கள் இருக்கின்றன. அவருக்குள்ள ஆஸ்தி 2 கோடியே 55 லட்சம் பவுனுக்குமேல் இருப்பதாகக் கருதப்படுகிறது. இதில் பெரும்பகுதி ஏலவே தானே அமெரிக்காவுக்கும், சுவிற்சர்லாந்துக்கும் மாற்றப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது.

—சீனக்கம்யூனிஸ்த அரசாங்கம் சென்ற ஆனிமாசத்திலே பிறநாடுகளைச் சேர்ந்த 94 கத்தோலிக்க மிஷனரிமார்களைத் தனது நாட்டினின்றும் வெளியேற்றியிருக்கின்றது. இவர்களுடன் சேர்த்து இவ்வாண்டின் தொடக்க முதல் குருமாரும் கன்னியாஸ்திரீமாருமாய் எல்லாமாக 696 மிஷனரிமாரை அது சீனுவிலிருந்து பலவந்தமாக வெளியேற்றியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## இரும்புத் திரைக்குப் பின்னல் (ஓர் விமரிசனம்)

கம்யூனிஸ்த கட்டுக்கதையைச் சமீபத்திலே இந்தியபிரதமர்நேரு அம்பலப்படுத்தினுர். இந்தியபாராளுமன்றத்திலே அவர்கூறியதாவது: "கம்யூனிஸ்தகட்சியின் நடவடிக்கைகள் காலத்துக்குஒவ்வாதவை. குட்டிச்சுவராக்கும் போக்கு. முன்னேற்றம் அடைவதற்காகச் சீனுவும், சோவியற்ருஷியாவும் கொடுத்தவிலையை இந்தியா ஒருநாளும்கொடாது." நேருவின்பேச்சு ஆணித்தரமாக இருந்தது. வார்த்தைகளை அவர்மழுப்பவில்லை. பயங்கரமான விலைஎன்று நேருசொல்வது என்ன? அந்தவிலையில் ஒருபகுதி, சுமார்மூன்றுகோடி மனிதர்களின் உயிர். ஆமாம். 1930-ம் ஆண்டின் தொடக்கத்திலே கூட்டுப்பண்ணைத்திட்டத்தில் இறங்கிய சோவியற்கம்யூனிஸ்த அதிகாரவர்க்கம் இலட்சக்கணக்காக குடியானவர்களைத் "தீர்த்துக்கட்டி" விட்டது. அடிமைத்தொழில் முகாங்களில் மடிந்தவர்கள் இலட்சக்கணக்கான நிரபராதிகள். இன்றைக்குங்கூட இப்படி மடிந்துகொண்டிருக்கிறவர்களின் எண்ணிக்கை ஒன்றரைக்கோடியாகும். இரும்புத்திரைக்குள்ளே நாடுகடத்தப்பட்ட தன்விளைவாகப் பொருளோடுஉயிரும் இழந்தமுஸ்லீம்கள், லிதுவானியர்கள், ஹங்கேரியர்கள், ருமேனியர்கள் இலட்சக்கணக்கிலாகும். கம்யூனிஸ்தர்கள் "முன்னேறுவதற்காக" மொத்தமாய் மூன்றுகோடி உயிர்ப்பலி நடந்திருக்கிறது. விலையில் இன்னொருபகுதி சுதந்திரம். கம்யூனிஸ்தகொடுங்கோலில் சொத்தைமட்டுமல்ல, சுதந்தரத்தையும் பறிகொடுத்துத் திண்டாடியவர்கள், இன்றைக்கும் திண்டாடுகிறவர்களின்எண்ணிக்கையும் இலட்சக்கணக்கிலாகும். இரும்புத்திரைக்குப்பின்னல் எங்குபார்த்தாலும் இரகசியப்பொலிஸ். ஒருவனைஒருவன் வேவுபார்க்கும் பயங்கரபொலிஸ்அமைப்பு. எந்தநேரத்தில் என்னஆபத்து வருமோ என்றகிலி மக்களுக்குச் சதாசர்வகாலமும் இருந்துவருகிறது. சோவியற்மக்கள் வாழ்விழந்ததுதான் கண்டபலன். இந்தியா சுதந்திரமடைந்தபிறகு சோவியற்ருஷியாவோ, அல்லதுசெஞ்சீனுவோ சாதித்திருப்பதைக்காட்டிலும் அபாரமானசாதனைகளைப்புரிந்துள்ளது. பிரமாண்டமான தொழிற்கூடங்கள் அங்கேபெருகிவருகின்றன. ஆனுல், இந்தியாவின் முன்னேற்றத்தைப்பார்க்கப் பிரசாரத்தில்கருத்தாயிருக்கிற கம்யூனிஸ்தர்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை. இந்தியாவின் இவ்வளவுமுன்னேற்றமும் சுதந்திரத்தைவளர்த்துச் சுபீட்சத்தைப்பெருக்கும் தன்மையில் இருக்கிறது. சோவியற்ருஷியாவிலே சுதந்திரம் முதற்பலி. அதன்மேல் கிடைத்த அதன் "முன்னேற்றம்" எப்படி இருக்கும்?

## கோறியமக்களுக்கு எச்சரிக்கை

— சவூல், கோறியா

ஆக்கிரமிப்புக்கான முஸ்திப்புகளைக் கம்யூனிஸ்தர்கள் வடகோறியாவில் செய்துவருவதினுல், அவற்றைத் தவிடுபொடியாக்க ஐக்கியநாடுகளின்விமானங்கள் முற்பட்டுள்ளன. இந்நடவடிக்கையினுல் சாதாரண வடகோறிய பிரஜைகளுக்குச் சேதம்விளையக் கூடாதென்னும் நோக்கத்துடன் வடகோறியாவிலுள்ள இராணுவகேந்திர ஸ்தானங்களைவிட்டு மக்களை வெளியேறுமாறு ஐக்கியநாடுகளின் இராணுவ தலைமைப்பீடம் எச்சரிக்கைசெய்துள்ளது. சுமார் 80 லட்சம் வடகோறிய ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் இந்த எச்சரிக்கையை றேடியோமூலம் ஐக்கியநாடுகள் ஒலிபரப்பிவருகின்றன. விமானமூலம் சுமார் 15 லட்சம் துண்டுப்பிரசுரங்களைப் பொழிந்துள்ளதாக அமெரிக்க ஐந்தாவதுவிமானப்படை அறிவித்துள்ளது.

## சுதந்திர உலகின் நோக்கம்

—ஹோனலூலு

"உலகிலுள்ள ஒவ்வொருநாடும், ஒவ்வொருமனிதனும் தத்தம் எதிர்காலத்தைத் தன்னிஷ்டம்போல் சுதந்திரமாக வகுத்துக்கொள்ளும் உரிமையைக்காப்பாற்றச் சுதந்திரஉலகம் திடசங்கற்பம் செய்துள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளில் பசிபிக்பிராந்தியத்தைப் பலப்படுத்துவதும் ஒன்ருகும்" என்று அமெரிக்க அரசாங்கமந்திரி திரு. அச்சீஸன்அவர்கள் இங்குநடைபெற்ற உலகசகோதரத்துவ சங்கக்கூட்டத்திற் பேசுகையில்கூறினுர். அவர் மேலும்கூறியதாவது: "சோவியற்ருஷியா மூட்டுக்கட்டை போட்டிராவிட்டால் உலகநாடுகளின் சக்திகள் அனைத்தும் இரண்டாவது உலகயுத்தத்தின்பின் புனருத்தாரண ஆக்கவேலைகளுக்காகச் செலவிடப்பட்டிருக்கும். "சுதந்திரஉலகம் தன்னைப்பலப்படுத்துவது, ஏனையநாடுகளைப்பாாத்து 'நாம் பலசாலிகள், எங்கள்சொற்படிதான் நீங்கள்நடக்கவேண்டும்'என்று சொல்வதற்கல்ல; நாம்இப்பொழுது பலசாலிகளாய்விட்டோம்; உங்களுக்குச் சமமானவர்களாய் விட்டோம்" என்று சொல்வதற்காகவே.

## கோறியா தடுத்துள்ளது

—அன்னுபோலிஸ்

ஆசியாவில் கம்யூனிஸ்தர்களின்கை மேற்கொண்டுஓங்கவிடாது கோறியாவிலே ஐக்கியநாடுகள்எடுத்துக்கொண்ட கூட்டுநடவடிக்கை தடுத்துள்ளதாக உபஅட்மிறல் ஜோய் அவர்கள் அமெரிக்ககடற்படைக் கழகத்தின் தலைமைப்பதவியை ஏற்றுக்கொண்டபொழுது கூறினுர். அவர்மேலும் கூறியதாவது: "எமதுசரித்திரத்திலே நடைபெற்ற முக்கியயுத்தங்களில் கோறியயுத்தமும் ஒன்ருகும். யுத்தநிறுத்தவிஷயமாக நாம் ஒருஉடன்பாட்டிற்கும் வரமுடியாமற்போனுலும் ஆசியாவில் கம்யூனிஸம்மேலும்பரவவிடாமற் தடுப்பதில் வெற்றிகண்டுள்ளோம். யுத்தநிறுத்தவிஷயமாக உடன்பாடுஏற்படுவதற்குச் சாதகமானசூழ்நிலை கொஞ்சமேனும் இருக்கும்வரை யுத்தநிறுத்த பேச்சுவார்த்தைகளைக் கைவிடுதல் அறிவுடைமையாகாது."

## சர்வதேச "வாலிப விழாக்கள்"

—வாஷிங்ரன்

கம்யூனிஸ்தஸ்தாபனங்களின் ஆதரவின்கீழ் உலகெங்கணும்நடைபெறும் சர்வதேச "வாலிப விழா"க்கள்எல்லாம், சுதந்திரநாடுகளிலுள்ள அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்காகப் போடப்பட்ட சோவியற்கம்யூனிஸ்த மாபெரும் சதித்திட்டத்தின் ஒருஅம்சமேயாகும். இவ்விஷயத்தை ஐயந்திரிபறநிரூபிக்கும் அறிக்கைஒன்றை அமெரிக்கசெனற்றின் உள்நாட்டுப்பாதுகாப்பு உபகம்மிற்றியின் தலைவரான செனற்றர்பாட் மக்காரன் அவர்கள் வெளியிட்டிருக்கிறுர். அமெரிக்க அரசாங்கத்தையும், ஏனையசுதந்திரநாடுகளின் அரசாங்கங்களையும் பலவந்தமாகக் கவிழ்ப்பதற்கே சோவியற் கம்யூனிஸ்தர்கள் உருக்கொடுத்து வருகிறுர்களென்பதைச் சமீபத்தில்நடத்தப்பட்ட செனற்விசாரணைகள் அம்பலப்படுத்தியதாகச் செனற்றர்மக்காரனின் காரியாலயம் அறிவித்துள்ளது.

Mal. No. 1. Eng.

## பரோபகார சீலரின் வருடாந்த ஞாபகதினம்

நோயானது டைனமைற்றைக்காட்டிலும் மிகவதிகம் பிராணுபத்துக்குரியது. அன்றியும் உலகத்திலே டைனமைற்றைக்காட்டிலும் கூடுதலான வியாதிகள்இருக்கின்றன. நாம் மிகநன்ருயறிந்த நியாயங்களையிட்டு, வைகாசி 13-ந் திகதியாகிய வருடாந்த ஞாபகதினத்தைக்காட்டிலும் டைனமைற்றைக் கண்டுபிடித்தவருக்கு அதிமிகமுக்கியத்துவம் காண்பிக்கிறோம். இது விளக்கிக்கொள்ளமுடியாத ஓர் காரியமாகும். ஏனெனில், சேர் ரெனுல்ட் ரெஸ்அவர்களின் ஜனனதினம் வைகாசி 13-ந் திகதியாகும். அகில உலகமும் ஆழ்ந்தமரியாதை காண்பிக்கவேண்டிய ஓர்மகான்அவர்.

விஞ்ஞானத்தினதும், மனிதவர்க்கத்தினதும் முகதாவிலே அவர் மிகப்பெரிய ஓர்ஆராய்ச்சியாளராக விளங்கியிருந்தார். அவர்கண்டுபிடித்தவைகள் ஓர்ஆஸ்பத்திரி ரசாயணபாகசாலையிலே அமைதியாகஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டன. மலேரியா, நுளம்புகள், குயினைன் ஆகியவைகளைக் கண்டுபிடித்த ஓர்வித்தியாவினேதரான இந்த ஆங்கிலேயர் கண்டுபிடித்தவைகள் உலகில்அரைவாசியிலே உருமாறிப்பரவிய போதிலும் வெகுசொற்பசனங்களே அவைகளைப்பற்றி அறிவார்கள். ஓர் நுளம்பின்வயிருனது அநேககாரியங்களைக் கண்டறிவதற்கு அதிகஞ்சிறிய ஓர்இடமாய் இருப்பதாகத்தோற்றும். ஆயினும் அதில்தான் ரெனுல்ட் ரெஸ் அவர்கள் தாம்கண்டுபிடித்தவைகளில் அதிகம் விசேஷப்பட்டசிலவற்றைக் கண்டுபிடித்தார்.

மலேரியாவுக்குரிய ஓர்வஸ்துவைக் கடித்த ஓர்நுளம்பு நோய்பற்றிய இரத்தத்தின் ஓர்சிறுதுளியைஉறிஞ்சித் தனதுவயிற்றுள் விட்டுக்கொள்ளுகின்றது. இந்தஇரத்தம் சீரணமாகும்போது வயிற்றிலேகாப்பாற்றப்படும் மலேரியாக்கிருமிகள் பெருக்கமடைகின்றன. பிந்த அந்தநுளம்பால் கடிக்கப்பட்டஒருஆளை நோய்தொற்றச் செய்கின்றது. வேறுவிதமாகச் சொல்லுமிடத்து, நுளம்பின்உடல் சிறியதோர் மலேரியாத்தொழிற்சாலையாயும், தனதுபயங்கரநோயைச் சித்திகரமாகப் பரப்புவதொன்ருயும் ஆகிவிடுகின்றது.

நுளம்புக்கடிகள் எண்ணிறந்தனவும், நோய்தொற்றும் இடையருத மூலகாரணமாய் அமைந்தனவும் என்ற உண்மையைச் சேர் ரெனுல்ட் ரெஸ் அவர்கள் பூரணமாக அறிந்திருந்தார். அவரால் இதுகண்டுபிடிக்கப்பட்டமையானது முக்கியமாகப் போதுமாயிருந்தது. ஆனுல், அவர் இன்னும்எவ்வளவோதூரம் ஆராய்ச்சிசெய்துகொண்டுபோனுர். "மலேரியாத் தடை" என்று அவர்எழுதிய ஓர் நூலிலே, நுளம்புகளெல்லாம் முற்ருய் ஒழிந்துபோவதானது மலேரியாவின் இறுதியைக் கருதுவதாகும். ஆனுல் நுளம்புகளைஒழிப்பது இயலாமையால் மலேரியாவைஎதிர்த்துப் போராடுதற்கான ஒரேயொருவழி கிரமமாகக் குயினைன் பாவித்துவருவதேயெனத் தெரிவித்திருக்கின்ருர். மலேரியாவைக் குணமாக்குவதற்கான சிறந்தமருந்துகளில்ஒன்று குயினைன். மலேரியா வராமல் பாதுகாப்பதற்காக மலேரியாக் காலமுழுவதும் தினமும் 6 கிறேய்ன் குயினையும், அதுவந்தபின் சிகிச்சையாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன்குயினையும் பாவித்துவரவேண்டுமென்று முந்திய சர்வதேசசங்கத்தின் மலேரியாக் கம்மிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. சிகிச்சைமுடிந்தபின் குயினைன்பாவிப்பதை நிறுத்தவேண்டும். திரும்பவும் மலேரியாகாணுமானுல் அதேமுறையாகச் சிகிச்சைசெய்துகொள்ள வேண்டும்.

## நாளு சங்கதிகள்

—தாயும் மகளுமான இருகன்னிகாஸ்திரீமாருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டுதற்கான விசாரணையிலே திருச்சடங்காசார திருச்சங்கம் தற்போது ஈடுபட்டுவருகின்றது. இவர்களில்மகள் உத்தான சபையைச் சேர்ந்த சங். ஹெட்விஜ் போர்செக்கா எனும் கன்னிகாஸ்திரீ. தாய் ஓர் விதவையும், உத்தானகன்னிகாசபையை அடியிட்டவளுமான சங்.செலின் கிறட்சின்ஸ்கா கன்னியாஸ்திரீ.

—வாதரோகம், விசேஷமாய்க் கீல்வாதங்கண்டு எழுந்திருக்கவோ, நடக்கவோமுடியாமல் வருந்துகிறவர்களின் வேதனையைக்குறைக்கப் "புற்றசொலிரைன்"எனும் ஊசிமருந்துஒன்று பிரித்தானியிலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கிளாஸ்கோநகரிலே கடின வாதரோகங்கண்டுவருந்திய 81 நோயாளிகளிலே இது சோதிக்கப்பட்டு 77 பேருக்கும் வேதனை தணிந்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது.

—நான்கு எஞ்ஜின்கள்கொண்ட "ஸ்கைமாஸ்றர்"என்ற பிரயாணிகளின் விமானம்ஒன்று சவூதி அராபியாவின் இபுனு சவூத் மன்னரின் உபயோகத்துக்கென்று ஓர் பறக்கும் அரண்மனையாக மாற்றப்பட்டுவருவதாய்ச் சான்பிரான்சீஸ்கோநகரிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இந்தவிமானத்தில் சிம்மாசனமும், இராசபடுக்கையறையும், இரத்தினக்கம்பளமும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

—பிரித்தானியின் முதல் அணுக்குண்டு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு செல்வதாகச் சொல்லப்படுகின்ற கம்பானியா என்ற பிரித்தானிய விமானந்தாங்கிக்கப்பல் சென்ற 5-ந்திகதி ஆஸ்திரேலியாவிலே பிறிமான்றிள்துறைமுகத்திலிருந்து மொண்டெபெல்லோதீவுகளுக்குப் பிரயாணப்பட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இவைகள் அங்கு பரிசோதனை செய்யப்படும்.

—முடிதுறந்த பாரூக் மன்னர் எகிப்திலுள்ள தமது தோட்டங்களிலோ சொத்துகளிலோ கைதொடப்படாதென்றும், பிரத்தியேக வர்த்தகசமுதாயங்கள், தூதுவர்கள் மூலமாக யாதும் வியாபார தொழில்முயற்சிகள் நடத்தப்படாதென்றும் எகிப்திய அரசாங்கம் கட்டளைபிறப்பித்திருக்கிறது.

## சம்பேதுருவார் திருநாள்

### மண்டைதீவு

இத்திருநாள் வழமைபோலச் சென்றமாதம் 23-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாயிற்று. நவதின உற்சவங்களின்போது கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம்சுவாமியவர்களால் ஒலிபரப்பிமூலம் அரியபிரசங்கங்கள்செய்யப்பட்டன. 31-ந்திகதி திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரமும், மாலையாராதனையும் நடைபெற்று, மறுநாள் ஆவணிமாசம் 1-ந் திகதி காலை வண. இம்மனுவேல், வண. முய்யே எனும் குரவர்கள் துணைபுரியக் கட்டளைக்குரவர் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றி அரியதோர் பிரசங்கமுஞ் செய்து ஒருதொகையான பாடசாலைச் சிறுவர்க்கு முதன்நன்மையும்அருளினுர். பிற்பகல் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும், அன்னதானத்தோடும் திருநாள்சிறப்பாக முற்றுப்பெற்றது.

எஸ். ஏ. தேவராசா

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 14-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org